3243
Complimentary to GOML
by the Publishers

உ

...லும் சேவலும் துணை

...வாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

# ஆடும்பரி வேல் அணிசேவல் விருத்தங்கள்

3243
RECEIVED
17072

(திரு எழுகூற்றிருக்கையுடன்)



(திருச்செங்கோட்டு மலை)

பதிப்பாசிரியர்கள் :

அருளிசை. S. V. சுப்ரமண்யன் &

அருட்கவி. S. V. சேதுராமன்

[15-5-65-ல் திருச்செங்கோட்டில் விசுவாவசுவூ வைகாசி விசாகத் திருவிழாவில் இலவசமாக வெளியிடப்பெற்றது]

வெளியிடுவோர் :

அருணகிரிநாதர் சஷ்டி வழிபாட்டுச் சங்கம்,

திருச்செங்கோடு.

பிப்ரவரி 1965

உரிமை] [பதிப்பாசிரியர்க்கே

# கந்தரலங்காரம்

[அடைப்புக் குறிக்குள் உள்ள எண்கள் அலங்கார எண்கள்]

✳

## 1. மயிலின் பெருமை

குசைநெகி ழாவெற்றி வேலோன் அவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு அடியிடஎண்
திசைவரை தூள்பட்ட அத்தூளின் வாரி திடர்பட்டதே. (11)

தடக்கொற்ற வேள்மயி லே!இடர் தீரத் தனிவிடில்நீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் ரோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்தும் கதிர்க்கப் புறத்தும் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்தும் திசைக்கப் புறத்தும் திரிகுவையே. (96)

சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தநந்தன் பணாமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியும் காசினியைப்
பாலிக்கு மாயனும் சக்ரா யுதமும் பணிலமுமே. (97)

## 2. வேலின் பெருமை

தேரணி யிட்டுப் புரமெரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக் க்ரவுஞ்சம் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடகம் நெளிந்ததுசூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே. (3)

ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை அகிலமுண்ட
மாலுக் கணிகலம் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியும் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையும் சூரனும் மேருவுமே. (62)

## 3. சேவலின் பெருமை

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் பதாகைஎன்னும்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாகம் உதிர்ந்த துடுபடலம்
இடைபட்ட குன்றமும் மாமேரு வெற்பும் இடிபட்டவே. (12)

உ

வேலும் மயிலும் சேவலும் துணை

**அருணகிரிநாத சுவாமிகள்**

திருவாய் மலர்ந்தருளிய

# ஆடும்பரி வேல் அணிசேவல் விருத்தங்கள்

(திரு எழுகூற்றிருக்கையுடன்)

பதிப்பாசிரியர்கள்:

**அருவிசை. S. V. சுப்ரமண்யன்**

&

**அருட்கவி. S. V. சேதுராமன்**

[15—5—1965 அன்று திருச்செங்கோட்டில் விசுவாவசுஸ்ரீ வைகாசி விசாகத் திருவிழாவில் இலவசமாக வெளியிடப் பெற்றது]

வெளியிடுவோர்:

**அருணகிரிநாதர் சஷ்டி வழிபாட்டுச் சங்கம்,**

**திருச்செங்கோடு.**

**உரிமை]** **பிப்ரவரி 1965** **[பதிப்பாசிரியர்க்கே**

முதற் பதிப்பு
1500 பிரதிகள்—பிப்ரவரி, 1965.

இப்புத்தகம் கிடைக்குமிடம்:

1. அருணகிரிநாதர் சஷ்டி வழிபாட்டுச் சங்கம்,
திருச்செங்கோடு.

2. அருளிசை. S. V. சுப்ரமண்யன்,
141, லிங்க செட்டித் தெரு,
சென்னை - 1.

பாரி அச்சகம், 127, பிராட்வே, சென்னை- 1.

உ

ஸ்ரீ வைஷ்ணவி துணை

# பதிப்புரை

தெய்வங்களைத் தோத்திரம் செய்வது போலத் தெய்வங்களின் ஆயுதங்கள், வாகனங்கள், கொடிகள் இவற்றையும் துதித்தல் மரபு. திருமாலின் ஐந்து படைகளுக்கும் 'பஞ்சாயுத ஸ்தோத்ரம்' என்னும் துதி நூலும், வாகனமும் கொடியுமான கருடனுக்கும் கருட ஸ்தோத்ரம் முதலான தோத்திர நூல்களும் உள்ளன. அம்முறையில் முருகனுடைய மயிலுக்கும், வேலுக்கும், சேவலுக்கும் தோத்திரங்கள் எழுந்திருக்கின்றன.

அருணகிரிநாத சுவாமிகளாற் பாடப்பெற்ற மயில் விருத்தம், வேல் விருத்தம் என்னும் இரு நூல்கள் வெகு காலமாக நாட்டில் நிலவி வருகின்றன. கி. பி. 1957-இல் வெளியான முருகவேள் பன்னிரு திருமுறை ஆறும் தொகுதியில் சேவல் விருத்தம் என்னும் நூலும் மயில், வேல் விருத்தங்களோடு சேர்த்து அச்சிடப் பட்டுள்ளது.

"ஆடும் பரி, வேல், அணி சேவல் எனப் பாடும் பணியே பணியா அருள்வாய்" (கந்தரநுபூதி), "மயிலையும் அவன் திருக்கை அயிலையும்..............நினைந்திருக்க வாருமே" (கடைக்கணியல் வகுப்பு) என்ற இடங்களிலும், மயில் வகுப்பு, வேல் வகுப்பு, வேல் வாங்கு வகுப்பு, இவற்றிலும், 3, 11, 12, 27, 62, 70, 96, 97 எண்ணுள்ள கந்தரலங்காரப் பாடல்களிலும் சிறப்பாக வேல், மயில், சேவல் இவற்றின் பெருமைகளைக் கூறியிருத்தலின் அருணகிரிநாதர் தான் நிச்சயமாக வேல், மயில், சேவல் விருத்தங்களைப் பாடியிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. இப்போது நிலவிவரும் வேல் மயில் விருத்தங்கள் அருணகிரியாருடைய வாக்கின் நயமும், வடமொழியும் தென்மொழியும் கலந்த நடையும் கொண்டுள்ளன. மயில் விருத்த நூற்பயன் கூறும் பாடல் "மயிலை........அருணகிரிநாதன் பகர்ந்த........விருத்தமொரு பத்தும்" எனக் கூறுகின்றது. எங்களுள் இளைய - அருட்கவி - சேதுராமன் (3—12—1956) அன்று பாடியுள்ள - அருட்புகழ் - அருணகிரிநாதர் துதிப்பதிகத்திலும்,

"விச்சை பிறங்கும் வேல்விருத்தம்
விளங்கும் தோகை மயில்விருத்தம்
செச்சைச் சூட்டுச் செஞ்சேவல்
விருத்தம் இனைய செப்பிவிரும்
பிச்சை அளிக்கும் எழிலொழுகும்
எழுகூற் றிருக்கை இவையெல்லாம்
பச்சை வள்ளி மணவாளன்
பாதாம் புயத்திற் பரிந்துவைத்தோய்!"

என வருகின்றது. இவற்றினின்று வேல், மயில், சேவல் விருத்தங்களும், எழுகூற்றிருக்கையும் அருணகிரிநாதராலேயே பாடப்பெற்றுள்ளன எனக் கொள்ளப்படுகின்றது.

கோபி செட்டிப் பாளையத்தின் அருகிலுள்ள அக்கரைக் கொடுவேரியில் கர்ணமாகப் பணியாற்றிவரும் அன்பர் G. சிவகுருநாத பிள்ளையவர்கள் மயில், வேல், சேவல் விருத்தங்களைத் திருஎழுகூற்றிருக்கையுடன் நாங்கள் விரும்பியபடி வெளியிட வேண்டுமென்று விரும்பி எழுதினர். அதற்காக இவ்விருத்தங்களிலெல்லாம் பொருளை ஆழ்ந்து பார்த்தபோது பல இடங்களில் பொருள் விளங்கவில்லை. மூல பாடமே திருப்திகரமானதாக இல்லை. பல இடங்களில் செய்யுளோசையே குறைந்திருந்தது. முருகவேள் பன்னிரு திருமுறை 6-ஆம் தொகுதியில் மூன்று விருத்தங்கட்கும் பொருள் எழுதப்பட்டிருப்பினும் சரியாயில்லாத மூல பாடத்திற்கு எழுதப்பட்டிருந்த உரையும் அமைதி தருவதாயில்லை. சைவ சித்தாந்த மகா சமாஜப் பதிப்பு, வ. த. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் பதிப்பு (மூன்றும் பாகம்), மு. ப. திருமுறை தொகுதி-6, 11—11—1939-இல் வெளியான சி. கல்யாணம் கம்பெனியார் பதிப்பு இன்னும் சில பதிப்புக்கள் இவற்றைப் பார்த்தபோது பாட பேதங்கள் மிகுதியாகக் காணப்பட்டன. எவருமே எந்த ஓலைச் சுவடியைப் பார்த்து இவை முதலில் அச்சிடப்பட்டனவெனக் குறிக்கவில்லை. சமாஜத்தாரும் இரண்டு அச்சுப் பிரதிகளைக் கொண்டே தாமும் அச்சிட்டுள்ளதாகக் குறித்துள்ளனர். ஆகவே, நிச்சயமாக மயில், வேல், விருத்த

ஓலைச் சுவடிகளைப் பார்க்க வேண்டுமென்ற அவா எங்களுக்கு அதிகமாயிற்று. அதன்படித் திருவான்மியூர் - டாக்டர். உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலையத்தில் கிடைத்த மயில் விருத்த ஓலைச் சுவடிகள் இரண்டும், சென்னை அரசாங்கக் கையெழுத்துப் பிரதி நிலயத்தில் கிடைத்த வேல் விருத்த ஓலைச் சுவடி ஒன்றும் ஒப்பிட்டு நோக்கப்பட்டன. (சுவடியின் எண்கள் புத்தகத்துள் ஆங்காங்கு கீழ்க் குறிப்பாக உள்ளே தரப்பட்டுள்ளன.)

மயில் விருத்தம்:—இதுபற்றி இரு சுவடிகள் ஆராயப்பட்டன. ஆய்ந்ததில் காப்பு, நூற்பயன், நூலில் 10 பாடல்கள் எல்லாவற்றிலுமே நல்ல பாடங்கள் கிடைத்தன. பாடல் 1-இல் 'வரதுங்க விரதுங்க', 'இந்தீவராசலன்'; 3-இல் 'அம்புயன் கை பெயரவே', 'மாதாநு பங்கியெனும் வள்ளுவர் சகோதரி', 'பாதாரவிந்த சேகரன் நிகரில் சிகர உற்பல கிரி'; 4-இல் 'வெகு கோடி நககோடிகளும் அடி பறித்துடன்'; 5-இல் 'கன்னி அம்பிகை கவுரி துர்க்கைபரை தனி அபிநவை', 'நிராலம்பன் நிர்ப்பாவன் நிர்வ்யாகுலன்', 'மதுகைட பாரி', 'மதுகை வித'; 6-இல் 'சூர்க்கடக மடிய'; 8-இல் 'செக்கரபி டேகச் சிகாரத்ன ராசி', 'சக்ரகிரி சூழவர மண்டலிக்கும் சருவ'; நூற்பயனில் 'ஆசிரிய வ்ருத்தமொரு', 'பால் மகரால யம்பெறுவர்', 'வாரீசன் மங்கையுடன் வாழ் அந் நாயகம் பெறுவர் அயிராவ தம்பெறுவர் அயிராணி தோள்பெறுவர் பேர் அமுதாசனம் பெறுவர் விழியாயி ரம் பெறுவர்' என்கின்ற பாட பேதங்கள் கிடைத்தவற்றுட் சிறப்பானவை.

தெலுங்கு எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ள மயில் விருத்த ஓலைச் சுவடியொன்று (D 1666 எண்ணுள்ளது) சென்னை அரசாங்கக் கையெழுத்துப் பிரதி நிலயத்தில் இருந்தது. அதனைத் தெலுங்குப் பண்டிதர் ஸ்ரீ K. ஸஞ்ஜீவிராய சர்மா, ஸ்ரீ C. குருமூர்த்தி ஐயர், ஸ்ரீ A. ராமஸ்வாமி செட்டியார் ஆகியோர் துணை கொண்டு படிக்கக் கேட்டதில் சில புதிய பாடங்கள் கிடைத்தன. மயில் விருத்தம் அச்சான பின்னர்தான் இத் தெலுங்கு ஓலையைப் படிக்க இயன்றதாதலின் புதிய பாடங்களைப் பிழைத் திருத்தத்திற் சேர்த்துக் காட்டியுள்ளோம்.

திருப்போரூர்க் கந்தப் பெருமாஞர் வாகனத்தின் பேரில் பாடப்பட்ட இரு விருத்தங்கள் மட்டும் மயில் விருத்தம் என்ற தலைப்பில் ஓர் ஓலையேட்டில் காணப்பட்டமையின், இப் புத்த கத்துள் அச்சிடப்பட்டுள. ஆனல், இவை அச்சான பின்னர் இத் தொகுதியிற் சேர்ந்த பத்துப் பாடல்களும் (B. ரத்ன நாயகர் & ஸன்ஸ்-1953 பதிப்பு '200 பல பாட்டுச் சில்லரைக் கோவை'- என்ற புத்தகத்தில்) முன்னரே அச்சாகியுள்ள செய்தி தெரிய வந்தது.

வேல் விருத்தம் :—பாடல் 3-இல் 'காளராத் திரிகளும்', 'பருந்து சம்பூகமும்'; 4-இல் 'மதி சதகோடி உமிழ் நிலவை', 'வனபுதல்வர் தம்புதல்வி கண்களெழில்'; 8-இல் 'மாமுதல் தடிந் தன்றி லங்கிரியி னூடுபோய்' 'சேட சூட காலாந்தக மகா துங்க இடபாரோக ணக்கட்க சூலதர துரிதசர சர்மாம்பர'; 9-இல் 'தரை நெளித்திட நடிக்கும்'; என்னும் பாட பேதங்கள் கிடைத்த பல புதிய பாடங்களுட் சிறப்பானவை.

சேவல் விருத்தம் :—கி. பி. 1957-இல் முருகவேள் பன்னிரு திருமுறையின் 6-ஆம் தொகுதியில் வேல் விருத்தமும் மயில் விருத்தமும் அச்சிடப்பட்டபோது சேவலுக்கும் இதுபோல் தனி நூல் இருக்குமோ எனத் தேடிய காலத்து அடையாறு - டாக்டர். உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலையத்தில் சேவல் விருத்த ஓலை யேடு ஒன்று இருப்பதாகத் தெரிந்தது. உடனே நூல் நிலையத் தார் மூலம் அப் பாடல்களைக் காகிதத்திற் பிரதி செய்து தரப் பெற்றுத் தணிகைமணி. திரு. வ. சு. செ. பிள்ளையவர்களிடம் கொடுத்தனர் பிரமஸ்ரீ R. கல்யாண சுந்தரம் ஐயரவர்கள். காகி தத்திற் பிரதிசெய்து தரப்பெற்றிருந்த பாடல்களில் பல இடங் களில் சொற்களும் தொடர்களும் விட்டுப் போயிருந்தமையின் அந்த இடங்கள் வேறு சொற்களால் நிரப்பப்பட்டு அடைப்புக் குறிக்குள் அச்சிடப்பட்டன. அச் சமயம் நாங்களும் அதில் தொடர்பு கொண்டிருந்தோம்.

இப்போது (எண் 914) ஓலைச் சுவடியையே நேரில் பார்த்த போது பல இடங்கள் தெளிவாகத் தெரிந்தன. சில இடங்கள்

ஊகித்தறிய முடிந்தன. ஆகச் சரியான பாடங்களைக் கொண்டு கூடியவரை திருத்தமான முறையில் சேவல் விருத்தம் அடைப்புக் குறிகளொன்றும் இன்றி இப்போது அச்சிடப்பட்டுள்ளது.

மயில் விருத்தத்தில் காப்புப் பாடலும், நூற்பயன் பாடலும் இவை நீங்கலாகப் பத்து விருத்தங்களுமாக மொத்தம் 12 பாடல்கள் உள்ளன. இந்த எல்லாப் பாடல்களிலும் திருத்தணி குறிக்கப் பெற்றுளது. வேல் விருத்தத்திலோ காப்பும், நூற் பயனும் இல்லை. மூன்றும் செய்யுளில் மட்டும் பழநி, சோலைமலை, பரங்குன்று, ஏரகம், தணிகை, செந்தூர், இடைக்கழி, ஆவினன்குடி, கதிர்காமம் ஆகிய தலங்கள் கூறப் பெற்றுள்ளன. மயில், வேல் விருத்தங்களின் கடைசி 10-ஆம் பாடல்கள் 'தனதன தனதன' என்ற சந்தத்தில் அமைந்துள்ளன. சேவல் விருத்தத்தில் காப்புச் செய்யுள் மட்டும் உளது. நூற்பயன் இல்லை. காப்பு நீங்கலாக 11 பாடல்கள் உள்ளன; தணிகையைப் பற்றிய குறிப்பு எங்குமே இல்லை. 9-ஆம் பாடலில் மட்டும் குன்றுதோறாடல், பழமுதிர்சோலை, ஆவினன்குடி, பரங்குன்று, திருவேரகம், செந்தூர் ஆகிய ஆறுபடை வீட்டுத் தலங்கள் குறிக்கப் பெற்றுள. பாடல் 11-இல் கூறப்பெற்ற 'பரிபூரண' எனும் சொல் 'சீபரி பூரணம்' எனப் பெயரிய திருத்தணிகையைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

பொதுவாக இந்த மூன்று விருத்தங்களிலுமே ஓலையேட்டைப் பார்த்தும் திருப்திகரமான பாடங்கள் கிடைக்காத இடங்களில் பழைய பாடங்களையே வேறு வழியின்றித் தந்திருக்கின்றோம்.

மயில், வேல், சேவல் விருத்தங்கள் முறையே அவற்றின் பெருமையை விரிவாகக் கூறுகின்றன. மயில் விருத்தப் பாராயணப் பயனை அருணகிரியாரே நூற்பயன் பாடலிற் கூறியுள்ளார். நூற்பயன் பாடலிற் புதிய பாடம் சிறப்பாகக் கொள்ளப் பட்டதற்குக் காரணம், முறையே பிரமன், திருமால், இந்திரன் ஆகிய மூவர்க்குரிய அடையாளம், வாகனம், தேவிமார் பெயர்கள், இவற்றைக் குறிப்பிட்டு அப்பதவிகள் கிடைக்குமெனச் சொன்

ணதே. அதிலும் புதிய பாடம் முன்னையதை விடச் செய்யு ளோசையில் ஒட்டம் தருவதாயும், இந்திரனுக்குச் சொல்லப்படா திருந்த அடையாளங்களைப் பூர்த்தி செய்வதாயும் அமைந்து ஓலையிற் காணப்பட்டதாற் சிறந்ததெனக் கொள்ளப்பட்டது. 'அழியாவரம்' என்றதனால் மூவர் பதவிகளைத் தவிர மற்றைய வரங்களெல்லாம் அடங்கி விட்டதெனக் கொள்ளலாம். வேல் விருத்தப் பாராயணம் பயத்தைப் போக்கி வெற்றியையும், ஞானத் தையும் அருள வல்லது. சேவல் விருத்தப் பாராயணம், பில்லி, சூன்யம், பேய் இவற்றினால் வரும் துன்பங்களையும், பல உடல் நோய்களையும் நீக்கும் வல்லமையுள்ளது என்பது அப் பாடல் களால் தெரிய வருகின்றது.

அருணகிரிநாத சுவாமிகளாற் பாடப்பெற்ற திருஎழுகூற் றிருக்கையும் இரத பந்தப் படத்துடன் இங்கு அச்சிடப்பட்டுளது. இதன் பாராயணப் பயனை நூலுள் குறிப்பிற் கண்டு கொள்க.

பாடல் முதற்குறிப்பகராதியும், அத்துடன் பாடுவோர்க்கு உதவியா யிருக்குமாறு 37 பாடல்களுக்கும் 37 இராகங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. பாடல்களுக்குக் குறிப்புரை வரையப் பட்டுள்ளது. பிற்சேர்க்கையில் வேல், மயில், சேவல் இவற்றின் சிறப்புக்களைக் கூறும் சில பாடல்களும், மயில், வேல், சேவல் இவற்றைக் குறிக்கும் அருமையான சொற்களும் தரப்பட் டுள்ளன.

மயில், சேவல் விருத்த ஓலையேடுகளைத் தந்துதவிய டாக்டர். உ. வே. சாமிநாதய்யர் நூல் நிலைய முதல்வர் பிரமஸ்ரீ விச்வநா தய்யர் அவர்கட்கும், மயில் விருத்த(த் தெலுங்கு எழுத்து) ஏடு, வேல் விருத்த ஏடு இவற்றை உதவிய சென்னை அரசாங்கக் கையெழுத்துப் பிரதி நிலையத்தார்க்கும் எங்கள் பெருநன்றி உரியதாகும். தெலுங்கு ஓலையேட்டைப் படித்துக் காட்டிய மூவர்க்கும் எங்கள் நன்றி. தனித்தனி மயில், வேல், சேவல் பிளாக்குகளைத் தந்துதவிய தணிகை மணியவர்கட்கும், திரு வெழுகூற்றிருக்கை பிளாக்கைக் கொடுத்துதவிய பிரமஸ்ரீ R. கலியாணசுந்தரம் ஐயரவர்கட்கும், 'ஆடும் பரிவேல் அணி

'சேவல்' பிளாக்கை உதவிய திருப்புகழடிமையவர்கட்கும் எங்கள் நன்றி உரியதாகுக.

இப் பாடல்களைப் புத்தக வடிவில் திருச்செங்கோட்டில் விசுவாவசுவஸ்ரீ வைகாசி விசாகத் திருவிழாவில் (15-5-1965-ல்) திருச்செங்கோடு - அருணகிரிநாதர் சஷ்டி வழிபாட்டுச் சங்கத்தின் மூலம் இலவசமாக வெளியிடும், அன்பர் சிவகுருநாத பிள்ளையவர்கட்கு முருகனடியார்கள் என்றும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையவராவர். இந்தத் தெய்வப் பணியில் எம்மை ஈடுபடுத்திய அன்னார்க்கு எங்கள் நன்றியைத் தெரிவிப்பதுடன், அவர் எல்லா நலன்களும் பெற்று இனிது வாழ முருகப் பெருமான் அருள் புரியும்படி வேண்டுகின்றோம்.

பல தொல்லைகளுக் கிடையில் இதனை அழகுற அச்சிட்டுக் கொடுத்த 'பாரி அச்சகத்தார்'க்கு எங்கள் நன்றி என்றும் உரியதாகும்.

இப் பதிப்பிற் பிழைகள் ஏதேனும் இருப்பின் பெரியோர்கள் அவற்றைப் பொறுத்து எங்கட்கும் தெரிவிக்கக் கோருகிறோம். இந் நூல்களை அன்பர்கள் நாடோறும் விடாமற் பக்தி சிரத்தையுடன் பாராயணம் செய்து இகபர நலன்களைப் பெறுவார்களாக.

141, லிங்க செட்டித் தெரு,
சென்னை - 1.
12—2—1965.

S. V. சுப்ரமண்யன்.
S. V. சேதுராமன்.

திருத்தணிகேசர் துணை

# பாராட்டுரை

**[தணிகைமணி-ராவ்பகதூர். வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A. அவர்கள் அளித்தது]**

'செய்வன திருந்தச் செய்' என்னும் ஔவைப் பிராட்டியின் திருவாக்கை நன்குணர்ந்த இப் பதிப்பாசிரியர்கள் எவ்வளவு முயற்சி செய்து இந் நூல்களை ஆய்ந்து வெளியிட்டுள்ளார்கள் என்பது அவர்கள் எழுதியுள்ள பதிப்புரையினின்றும் நன்கு புலப்படும். ஆண்டில் இளைஞர்களாயினும் அறிவிலும், முயற்சியிலும், ஆராய்ச்சித் திறனிலும், தமிழ்ப் புலமையிலும், கடவுட் பக்தியிலும் மிகச் சிறந்து விளங்குபவர்கள் இவ்விருவரும் என்பது தமிழுலகம் நன்கு அறிந்ததே. 'யாரே அழகுக் கழகு செய்வார்?' என்னும் பழமொழிப்படி இந் நூலுக்கு யான் எழுதும் பாராட்டுரை பெருமிகை யென்பதை யான் சொல்லவும் வேண்டுமோ?

இவ்வாறே ஆங்காங்கு கிடைக்கக் கூடிய திருப்புகழ் ஓலைப்புத்தகங்களையும் ஆய்ந்து, கிடைக்கக் கூடிய நல்ல பாட பேதங்களை இவர்கள் வெளியிடுவார்களாயின் தமிழுலகம் அவர்களுக்கு மிகக் கடமைப்பட்டதாகும்.

இவ்விருவருடைய பெருந்திறனை நன்குணர்ந்து முருக பக்தியிற் சிறந்த பெரியார் - திருவாளர் G. சிவகுருநாத பிள்ளையவர்கள் இந் நூலை வெளியிடும் திருப்பணியை இவர்களிடம் ஒப்புவித்தது மிகப் பொருத்தமான தொன்றே.

இப் பதிப்பாசிரியர்களும், இந் நூல்கள் வெளிவருவதற்கு மூல காரணராகிய பிள்ளையவர்களும் நோயின்றிப் பல்லாண்டு வாழத் திருத்தணிகை எம்பெருமான் திருவருள் புரியும்படி அப் பெருமானது பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிகின்றேன்.

18, வேங்கடராமன் தெரு,
சென்னை - 28.
7—2—1965.

வ. சு. செங்கல்வராய பிள்ளை.

# முகவுரை

[திருப்புகழ் மணி - பிரம்மஸ்ரீ T. M. க்ருஷ்ணசாமி ஐயரவர்கள் அளித்தது]

முருகன் சம்பூரண அனுக்ரஹம் பெற்று எங்கும் பாடியும், பேசியும் வரும் ஸ்ரீ அருளிசைக்கவி. S. V. சுப்பிரமணியம், அருட்கவி. S. V. சேதுராமன் இவர்களுக்கு, திருப்புகழ் மணியப்பா எழுதியது.

தமிழுலகம் போற்றும் அருணகிரியார் பாடியுள்ள மயில், வேல், சேவல் விருத்தங்களுக்கும், திருப்புகழுக்கும் ஒரே ஒரு முகந்தான் உண்டு. அது முருகன் ஷண்முகமாகும். அதை உரைப்பதே பஜனையாகும்; நினைப்பதே தியானமாகும். இவையெலாம் முருகன் சம்பூரண அருளை ஸ்ரீ அருணகிரியார் முகமாகத் தமிழுலகம் பெற்ற பெரிய ஐச்வரியம்.

ஷண்முக விலாஸமாகும் இச் சிறிய பதிப்புக்கு ஹரே ஷண்முகா ஓம் என்பது முகமும் உரையும் ஆகும். இப்படிக்கு முருகன் செல்லக் குழந்தைகளாம் உங்களைப் பலதரம் வாழ்த்தி ஆசீர்வதித்து எழுதியது.

திருமயிலை,<br>8—2—1965.

திருப்புகழ் அப்பா

உ

முருகன் துணை

# முன்னுரை

(வாகீச கலாநிதி, பிரம்மஸ்ரீ கி. வா. ஜகந்நாத ஐயர் அவர்கள் அளித்தது)

முருகன் திருவருட் கடலில் துளைந்தாடி அநுபூதி பெற்றுப் பல பாடல்கள் பாடி, அவற்றைப் பயில்வாருக்கும் முருகனருள் கிடைக்கும்படி செய்தருளிய பரம குருநாதராகிய அருணகிரி நாதப் பெருமான் கந்தர் அநுபூதி முதல் பாட்டில், "ஆடும்பரி வேல் அணிசேவல் எனப், பாடும் பணியே பணியா அருள்வாய்" என்று வேண்டுகிறார். மயிலையும், வேலையும், சேவலையும் தாம் முருகனைப் புகழ்ந்து பாடிய அருட் பாடல்களினிடையே பல படியாகப் பாராட்டும் அப்பெருமான் அந்த மூன்றையும் தனியே சிறப்பாகப் பாராட்டிப் புகழ்ந்து மூன்று பதிகங்கள் பாடியருளி யிருக்கிறார். மயில் விருத்தம், வேல் விருத்தம், சேவல் விருத்தம் என்ற பெயரோடு அவை வழங்குகின்றன. 'ஆடும்பரி வேல் அணி சேவல் எனப் பாடும் பணி'யை அருணகிரிநாதர் பெற் றிருந்தார். அவர் அருளால் நாமும் முருகனுக்கு உரிய அந்த மூன்று அங்கங்களையும் பாடுவதற்கு அவர் பாடிய அம் மூன்று விருத்தங்களும் உபகாரமாக இருக்கின்றன.

அருணகிரிநாதருக்கே உரிய மிடுக்கான இனிய ஓசையை யுடைய நடையை இந்த விருத்தங்களில் காணலாம். வட மொழிச் சொற்களையும் தொடர்களையும் பெய்து பாடும் அவ ருடைய இயல்பு இந்த நூல்களிலும் தெளிவாக உள்ளது.

இவற்றைப் பாராயணம் செய்பவர்கள் பயமும் பிணியும் பிற இன்னல்களும் நீங்கி நல் வாழ்வு பெறுவர். பாராயணம் செய்தற்கு ஏற்ற வகையில் இந்த மூன்று விருத்தங்களையும் ஒன்றாகச் சேர்த்துத் தனியே வெளியிடும் அன்பர் பெறும் புண் ணியம் மிகப் பெரிது. முருகன் திருவருளால் இதை வெளி யிட்டவர்களும், படித்தும் பாராயணம் செய்தும் பயன்பெறுகிறவர் களும் எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

*வேல்மயில்சே வல்விருத்தம் வேண்டி அருணகிரி*
*சால்புறவே சாற்றிநலம் சார்த்தினனால்—மால்பரிய*
*இந்தவிருத் தங்களையன் பிற்படிப்பார் ஓங்குவரே*
*கந்தனரு ளாலே களித்து.*

சென்னை-4.
3—2—1965.

கி. வா. ஜகந்நாதன்.

# அணிந்துரை

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் நாகாசல வேலவரின் முதிராத திருவடிகளின்மீது அளவற்ற காதல் கொண்டிருந்தார். அவருடைய வேல், மயில், சேவல் இவற்றின் சிறப்புக்களை மிக அழகாகச் சொல்லுகிறார்.

கந்தர் அந்தாதி 23-வது பாடலில் வேலாயுதத்தின் பெருமை என்ற தலைப்பின் கீழ்,

"தினகர ரக்கர தங்கெடுத் தார்குரு தேசிகர்செந்
தினகர ரக்கர மாறுடை யார்தெய்வ வாரணத்தந்
தினகர ரக்கர சத்தியின் றுகிலத் தேவர்நண்ப
தினகர ரக்கர தந்தீர்வ ரீர்வர் செகமெங்குமே."

அதாவது செங்கோட்டு வேலவரது திருக்கைவேல் எழுந்தருளாவிடில் தேவலோகம் பாழாவது மல்லாமல் அரக்கர்களும் நிலையாய் இருந்து உலக முழுவதையும் நாசஞ் செய்துவிடுவார்கள் என்கிறார். வேலின் பெருமையை "வைவைத்த வேல்," "குன்றமெட்டும் கிழித்தோடு வேல்" என அலங்காரத்தில் விளக்குகிறார்.

கந்தர் அலங்காரம் 97-வது பாடலில் மயிலின் ஆற்றலைச்,

"சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தநந்தன் பணாமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே."

என்று எடுத்துக் காட்டிச் செப்பியுள்ளார்.

அலங்காரம் 70-வது பாடலில் ''பயந்த தனிவழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே'' என உறுதிப் பாட்டுடன் பகர்ந்துள்ளார்.

செங்கோட்டு வேலவர் செஞ்சேவலைப் பற்றி ''பொற் சித்ர'' எனத் தொடங்கும் ஷை தலத் திருப்புகழில் (386) 6 வரிகளில் வர்ணித்துள்ளார். அது கீழ் வருமாறு :

" குற்சித்துக் கொட்டுக் கொட்டுத்
துக்கச்சத் துக்குக் குக்குக்
குக்குக்குக் குக்குக் குக்குக் கெனமாறு-
குட்சிக்குப் பக்ஷிக் கைக்குக்
கக்ஷத்திற் பட்சத் தத்தக்
கொட்டிச்சுட் டிக்கொக் ரிக்குக் குடதாரி ;"

" சென்றே இடங்கள் கந்தா எனும்பொ
செஞ்சேவல் கொண்டு வரவேணும்."— (திருப். 376)

என்றும் சேவலின் பெருமையைப் புகழ்ந்துள்ளார்.

பொதுவாக, அலங்காரத்திலும், மற்றைய நூல்களிலும், குறிப்பாக அநுபூதியிலும், செங்கோட்டு வேலவர் தமக்கு மட்டும் காட்சிக்கும் நட்புக்கும் எளியர் என்பதை வெளிப்படையாகக் காட்டிப், பொதுவாக, முருகனை வழிபடுதல் நன்று, அதிலும் 'செங்கோடனை வாழ்த்துகை சால நன்றே' என்று உறுதிப்பாட்டுடன் ஸ்திரப் படுத்துகிறார். க்ஷேத்ராடனம் முடிந்து தாம் வயலூர் சென்ற பின்னரும் செங்கோடன் ஞாபகத்தில் 'கோவைவா' எனத் தொடங்கும் வயலூர்த் திருப்புகழில்,

" காவி டாத திருச்செங் கோடு நாடு தனக்கும்
காவி சூழ்வய லிக்கும் ப்ரியமானாய் "

என்கிறார்.

தாம் சுக சொருபம் பெற்ற பின்னரும் வேடிச்சி காவலன் வகுப்பில்,

" அருணையில் இடைக்கழியில் உரககிரி யிற்புவியில்
அழகிய செருத்தணியில் வாழ்கற்ப காடவியில்
அறிவுமறி தத்துவமும் அபரிமித வித்தைகளும்
அறிஎன இமைப்பொழுதில் வாழ்வித்த வேதியன் "

என்று இயம்புகிருர்.

இங்ஙனமெல்லாம் மயில், வேல், சேவல் இவற்றைப் புகழ்ந்துள்ள அருணகிரிநாத சுவாமிகளின் உள்ளக்கிடக்கையிலிருக்கும் செங்கோட்டு வேலவரின் ஆடும்பரிவேல் அணிசேவல் விருத்தங்கள் மூன்றையும் தொகுத்து, ஆண்டில் இளைஞரும், ஸ்ரீ வள்ளிமலை சுவாமிகளின் சீடரும், போரூர் முருகப் பெருமானுரால் ஆட்கொள்ளப்பட்டவருமான சென்னை மறைக்குலமணி அருட்கவி - ஸ்ரீ எஸ். வி. சேதுராமனுர் அவர்கள் உளப்பாங்கின்படி 15—5—1965-ல் விசுவாவசுஸு வைகாசி - விசாகத் திருவிழாவில் நாங்கள் வெளியிடுகின்ருேம். இதனை அச்சிடப் பொருளுதவி செய்துள்ளதுமன்றி வெளியிடுவோராக எங்களை அமைத்த ஸ்ரீ G. சிவகுருநாதப் பிள்ளையவர்கட்கும், ஓலைகளை ஆய்ந்து நூல்களைப் பதிப்பித்துத் தந்ததுமன்றி, விரிவான பதிப்புரையொன்றும் வழங்கிப் பாடல்களுக்கு ராகங்களும் அமைத்துக் குறிப்புரை, அநுபந்தம் முதலியவற்றையும் எழுதிச் சேர்த்துதவிய சென்னை - அருளிசை. எஸ். வி. சுப்ரமண்யனுர், அருட்கவி. எஸ். வி. சேதுராமனுர் சகோதரர்கட்கும், பாராட்டுரை, முகவுரை, முன்னுரை இவை தந்துதவிய 'தணிகை மணி', 'திருப்புகழ் மணி', 'வாகீச கலாநிதி' ஆகிய பெரியார்கட்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

திருச்செங்கோடு, 8—2—1965.

அருணகிரிநாதர் சஷ்டி வழிபாட்டுச் சங்கத்தார்

## பாடல் முதற்குறிப்பகராதி (இராகங்களுடன்)

| பாடல் முதற் குறிப்பு | பாடல் எண் | பக்க எண் | இராகம் | பாடல் முதற் குறிப்பு | பாடல் எண் | பக்க எண் | இராகம் |
|---|---|---|---|---|---|---|---|
| அச்சப் | 29 | 22 | மாண்டு | செக்கரபி | 9 | 7 | சிந்துபைரவி |
| அண்டங் | 21 | 16 | வராளி | தாயை் | 30 | 23 | காம்போதி |
| அண்டர் உல | 18 | 14 | சாமா | தீரப்ப | 8 | 6 | ஸஹானா |
| அண்டரண் | 13 | 10 | பியாகடை | தேடுதற் | 23 | 17 | பைரவி |
| ஆதார | 4 | 3 | கேதாரகௌளம் | நிராசத | 11 | 8 | சாரங்கா |
| ஆலமாய் | 19 | 15 | ஹரிகாம்போதி | பங்கமா | 31 | 24 | ஹம்ஸாநந்தி |
| உகேகோடி | 5 | 4 | சாவேரி | பந்தாட | 20 | 15 | ஹிந்தோளம் |
| உருவாய் | 34 | 26 | புந்நாகவராளி | பூவிலயன் | 36 | 27 | மத்தியமாவதி |
| உலகிலநு | 26 | 20 | பிலஹரி | மகர சல | 35 | 27 | ஹமீர்கல்யாணி |
| எந்நாளு | 12 | 9 | ஷண்முகப்ரியா | மகரம் அள | 15 | 12 | வாசஸ்பதி |
| எரியணைய | 27 | 21 | பெஹாக் | மாமுதல் | 22 | 17 | கரகரப்ரியா |
| ஓருருவா | 37 | 30 | ஆரபி | வந்தார்ப் | 33 | 25 | சங்கராபரணம் |
| கரிமுரட் | 28 | 21 | யதுகுலகாம்போதி | வலாரி | 24 | 18 | தர்பார் |
| கொந்தார் | 25 | 19 | ஹம்ஸத்வநி | வாடித்தவி | 14 | 11 | நாதநாமக்ரியா |
| சக்ரப்ர | 3 | 3 | அடாணா | வீருன | 32 | 25 | குந்தலவராளி |
| சங்கார | 7 | 5 | கானடா | வெங்காள | 16 | 13 | மோகனம் |
| சந்தன | 1 | 1 | நாட்டை | வேதாள | 17 | 13 | தோடி |
| சந்தான | 2 | 2 | கல்யாணி | ஜோதியிம | 6 | 5 | ஆநந்தபைரவி |
| சிகரதம | 10 | 7 | தந்யாசி | | | | |

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும்



ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்

அந்தாதி இல்லா இறைவனுக் கந்தாதி அன்றுரைத்தும்
நந்தா வகுப்பலங் காரம் அவற்கே நனிபுனைந்தும்
முந்தா தரவில் அவன்புகழ் பூதியும் முற்றுஞ்சொன்ன
எந்தாய் அருண கிரிநாத! என்னைநீ ஏன்றருளே.

(தணிகைமணி வ. சு. செ. பிள்ளையவர்கள்)

உ

வெள்ளை வாரணப், பிள்ளை யார்பதம்
உள்ளு வார்மனக், கள்ள மாறுமே.

அருணகிரிநாத சுவாமிகள்
திருவாய் மலர்ந்தருளிய

# 1. †மயில்  விருத்தம்

காப்பு

(பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

1

சந்தன பாளித குங்கும ம்ருகமத
சண்பக கடகபுயச்
சமர சிகாவல குமர சடானன
சரவண குரவணியுங்

---

† இம் மயில் விருத்தம் திருவான்மியூரிலுள்ள மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யர் நூல் நிலையத்து 233-A, 413-D எண்களுள்ள ஓலையேட்டுப் பிரதிகளுடன் ஒத்திட்டுப் பார்த்துச் செப்பனிட்டு ஈண்டு அச்சிடப் பெற்றுள்ளது. சென்னை, அரசாங்கக் கையெழுத்துப் பிரதி நிலையத்து D. 1666 எண்ணுள்ள ஓலையேட்டுப் பிரதி தெலுங்கு எழுத்துக்களில் உள்ளது. அதில் காப்புப் பாடலுக்கு முன்பு கீழ்க்கண்ட வெண்பா காணப்பட்டது. அஃது ஈண்டு திருத்தப்பெற்று அச்சிடப்படுகின்றது.

(மயிலின் பெருமை)

"நடக்கின் நிலம்அதிரும் நற்சிறகால் வீசி
அடக்கின் அருவரைகள் நீறும்—இடைக்கழியிற்
கந்தனார் எங்கள் கயிலாயம் வாழுமையாள்
மைந்தனார் ஏறு மயில்"

கொந்தள பார கிராத புராதனி
கொண்க எனப்பரவக்
கூதள சீதள பாதம் எனக்கருள் !
குஞ்சரி மஞ்சரிதோய்
கந்த க்ருபாகர கோமள கும்ப
கடாசல கோகநகக்
கரமுக சாமர கர்ண விளம்பித
சூத்ர கபோல மதத்
தெந்த மகோதர மூஷிக வாகன
சிந்தூர பற்பநுதற்
சிவசுத கணபதி விக்நவி நாயக
தெய்வ சகோதரனே.

## நூல்

(பதினன்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

2

சந்தான புஷ்பபரி மளகிண் கிணீமுகச்
சரணயுக ளமிர்தப் ப்ரபா
சந்த்ரசே கரமூஷி காரூட வெகுமோக
சத்யப்ரி யாலிங் கனச்
சிந்தா மணிக்கலச கரகட கபோலத்
த்ரியம்பக விநாயகன் முதற்
சிவனைவலம் வருமளவில் உலகடைய நொடியில்வரு
சித்ரக் கலாப மயிலாம்
மந்தா கினிப்ரபவ வரதுங்க விரதுங்க
வனசரோ தயக்ருத் திகா
வரபுத்ர ராஜீவ பர்யங்க இந்தீ
வராசலன் குலிசா யுதத்

இந்த்ராணி மங்கல்ய தந்துரட் சாபரண
இகல்வேல் விநோதன் அருள்கூர்
இமயகிரி குமரிமகன் ஏறுநீ லக்ரீவ
ரத்னப் ப்ரவாள மயிலே. (1)

3

சக்ரப் ப்ரசண்டகிரி முட்டக் கிழிந்துவெளி
பட்டுக் க்ரவுஞ்ச சயிலம்
தகரப் பெருங்கனக சிகரச் சிலம்புமெழு
தனிவெற்பும் அம்பு வியுமெண்
திக்குத் தடங்குவடும் ஒக்கக் குலுங்கவொரு
சித்ரப் பதம்பெயர வே
சேடன்முடி திண்டாட ஆடல்புரி வெஞ்சூர்
திடுக்கிட நடக்கு மயிலாம்
பக்கத்தில் ஒன்றுபடு பச்சைப் பசுங்கவுரி
பத்மப் பதங்கமழ் தரும்
பாகீ ரதிச்சடில யோகீ சுரர்க்கினிய
பரமஉப தேசம் அருள்செய்
கைக்குச் செழுஞ்சரவ ணத்திற் பிறந்தஒரு
கந்தச் சுவாமி தணியற்
கல்லார கிரிமுருகன் வருகிரண மரகதக்
கலபகக திலக மயிலே. (2)

4

ஆதார பாதாள முடிபெயர அடிபெயர
அண்டமுக டதுபெயர நா
டரியவா ளுடர்முடி பெயரஎண் திசைபெயர
அம்புயன் கைபெயர வே

வேதாள தாளங்க ளுக்கிசைய ஆடுவார்
மெச்சிப் ப்ரியப்பட விடா
விதபவுரி கவுரிகண் டுளமுருக விளையாடும்
விஸ்த்தார நிர்த்த மயிலாம்

மாதாநு பங்கியெனும் வள்ளுவர் சகோதரி
மகீதரி கிராத குலமான்
மறைமுநி குமாரிசா ரங்கநந் தினியெனும்
வள்ளிமணி நூபுர மலர்ப்

பாதார விந்தசே கரன்நிகரில் சிகரஉற்
பலகிரி அமர்ந்த பெருமாள்
படைநிருதர் கடகமுடை படநடவு பச்சைப்
பசுந்தோகை வாகை மயிலே. (3)

5

உககோடி முடிவில்மண் டியசண்ட மாருதம்
உதித்ததென் றயனஞ்ச வே
ஒருகோடி அண்டர்அண் டங்களும் பாதாள
லோகமும் பொற்குவடு மாம்

வெகுகோடி நககோடி களும்அடி பறித்துடன்
விசும்பிற் பறக்க விரிநீர்
வேலைசுவ றச்சூர் நடுங்கக் கொடுஞ்சிறகை
வீசிப் பறக்கு மயிலாம்

ககோடி கொண்டவுணன் நெஞ்சம் பிளந்தநர
கேசரி முராரி திருமால்
நாரணன் கேசவன் சீதரன் தேவகி
நந்தனன் முகுந்தன் மருமான்

முகவோடி நதிதரன் குருகோடி அநவரத
முகிழுநீ லக்கிரியில் வாழ்
முருகன் உமை குமரன் அறு முகன்நடவு விகடதட
மூரிக் கலாப மயிலே. (4)

6

ஜோதியிம வேதண்ட கன்னிஅம் பிகைகவுரி
துர்க்கைபரை தனி அபி நவை
துங்கத் த்ரிசூலதரி கங்காளி சிவகாம
சுந்தரி பயந்த நிரைசேர்

ஆதிநெடு மூதண்ட அண்டபகி ரண்டங்கள்
யாவுங் கொடுஞ்சிற கிறைல்
அணையுந்த ஞதுபெடை அண்டங்கள் எனவே
அணைக்குங் கலாப மயிலாம்

நீஇமறை ஓதண்டர் முப்பத்து முக்கோடி
நித்தலும் பரவு கிரியாம்
நீலகிரி வேலவன் நிராலம்பன் நிர்ப்பாவன்
நிர்வ்யா குலன்சங்கு வாள்

மாதிகிரி கோதண்ட தண்டந் தரித்தபுயன்
மாதவன் முராரி திருமால்
மதுகைட பாரிதிரு மருகன் முருகன் குமரன்
மதுகைவித வாகை மயிலே. (5)

7

சங்கார காலமென அரிபிரமர் வெருவுறச்
சகலலோ கமும் ஒடுங்கச்
சந்த்ரசூ ரியர்ஒளித் திந்த்ராதி அமரரும்
சஞ்சலப் படஉமை யுடன்

கங்காளர் தனிநாட கஞ்செய்த போதந்த
காரம் பிறந்திட நெடுங்
ககனகூ டமுமேலை முகடுமூ டியபசுங்
கற்றைக் கலாப மயிலாம்

சிங்கார குங்கும படீரம்ருக மதயுகள
சித்ரப் பயோதர கிரித்
தெய்வவா ரணவநிதை மருவுபுநி தன்சேய்
திருத்தணி மகீதரன் இருங்

கெங்கா தரன்சுதன் விசாகன்மக ராலய
க்ருபாகரன் கார்த்தி கேயன்
கீர்த்திமா சூர்க்கடக முடியக் க்ரவுஞ்சகிரி
கிழிபட நடாவு மயிலே. (6)

8

தீரப் பயோதியுந் திக்குமா காயமும்
செகதலமும் நின்று சுழலத்
திகழ்கின்ற முடிமவுலி சிதறிவிழ வெஞ்சிகைகள்
தீக்கொப்பு ளிக்க வெருளும்

பாரப் பணாமுடி அநந்தன்முதல் அரவெலாம்
பதைபதைத் தேந டுங்கப்
படர்சக்ர வாளகிரி தூள்படவை யாளிவரு
பச்சைப் ப்ரவாள மயிலாம்

ஆரப் ப்ரதாபமுக படகடின பாடீர
அமிர்தகல சக்கொங்கை யாள்
ஆகம கலாவல்லி அபிராம வல்லிபர
மாநந்த வல்லி சிறுவன்

கோரத் த்ரிசூலத் த்ரியம்பக ஜடாதார
குருதரு திருத்தணியில் வேள்
கொடியநிசி சரர்உதரம் எரிபுகுத விபுதர்பதி
குடிபுகுத நடவு மயிலே. (7)

*9*

செக்கரபி டேகச் சிகாரத்ன ராசிநிரை
சிந்தப் புராரி அமிர்தந்
திரியப் பிறந்ததெனு ஆயிரம் பகுவாய்கள்
தீவிஷம் கொப்பு ளிப்பச்

சக்ரகிரி சூழவர மண்டலிக் குஞ்சருவ
சங்கார கோர நயனத்
தறுகண்வா சுகிபணு முகமெடுத் துதறுமொரு
சண்டப் ப்ரசண்ட மயிலாம்

விக்ரம கிராதகுலி புனமீ துலாவிய
விருத்தன் திருத்தணியில் வேள்
வேலா யுதன்பழ வினைத்தூரி சறுத்தெனை
வெளிப்பட உணர்த்தி யருளித்

துக்கசுக பேதமற வாழ்வித்த கந்தச்
சுவாமிவா கனமான தோர்
துரககஜ ரதகடக விகடதட நிருதர்குல
துஷ்டநிஷ் டூர மயிலே. (8)

*10*

சிகரதம நியமேரு கிரிரஜத கிரிநீல
கிரியெனவும் ஆயிர முகத்
தெய்வநதி காளிந்தி எனநீழ விட்டுவெண்
திங்கள்சங் கெனவெ ளுப்ப

நிகர்இரவி தனிநேமி எனஉலகம் அளவுசெய
நின்றமா முகில்என்ன வே
நெடியமுது ககனமுக டுறவிசிறி நிமிருமொரு
நீலக் கலாப மயிலாம்

அகருவனம் மணம்வீசு தணியல்அபி ராமவேள்
அடையலர்கள் முடிஅசைய வே
அடல்வேல் கரத்தசைய ஆறிரு புயங்களில்
அலங்கற் குழாம்அசைய வே

மகரகன கோமளக் குண்டலம் பலஅசைய
வல்லசுரர் மனம்அசைய மால்
வரைஅசைய உரகபிலம் அசையஎண் திசைஅசைய
வையாளி சுற்று மயிலே. (9)

## 11

நிராசத இராசத விரோதத பரீதிய
நிராகுலன் நிராமய பரன்
நிலாதெழு தலாலறி விலாநெறி நிலாநெறி
நிலாவிய உலாச இதயன்

குராமலி விராவுமிழ் பராரைய மராநிழல்
குராநிழல் பராவு தணியற்
குலாசல சிலாதலம் எலாமினி துலாவியல்
குலாவிய கலாப மயிலாம்

புராரிகு மராகுரு பராஎனும் வரோதய
புராதன முராரி மருகன்
புலோமசை சலாமிடு விலாசன வலாரிபு
கலாயஅ யிலாயுதன் இருந்

தராதல கிராதகு லிராகஅ பிராமிவல்
  தராதநல் விநோத சமரன்
தடாரிவி கடாரிகு வடாகிசு வடாதிகள்
  சடாரென நடாவு மயிலே. (10)

## நூற்பயன்

### 12

எந்நாளும் ஒருசுனையில் இந்த்ரநீ லப்போ
  திலங்கிய திருத்தணியில் வாழ்
எம்பிரான் இமையவர்கள் தம்பிரான் ஏறுமொரு
  நம்பிரான் ஆன மயிலைப்

பன்னாளும் அடிபரவும் அருணகிரி நாதன்
  பகர்ந்தஅதி மதுர சித்ரப்
பாடல்தரும் ஆசிரிய வ்ருத்தமொரு பத்தும்
  படிப்பவர்கள் ஆதி மறைநூல்

மன்னான் முகம்பெறுவர் அன்னம்வ றப்பெறுவர்
  வாணிதழு வப்பெறுவர் பால்
மகரா லயம்பெறுவர் உவணம்வ றப்பெறுவர்
  வாரிசன் மங்கை யுடன்வாழ்

அந்நா யகம்பெறுவர் அயிரா வதம்பெறுவர்
  அயிராணி தோள்பெறுவர் பேர்
அமுதா சனம்பெறுவர் விழியா யிரம்பெறுவர்
  அழியா வரம்பெறுவ ரே.

மயில் விருத்தம் முற்றிற்று.

(I)

13

*அண்டரண் டங்களும் ஈரேழு புவனமும்
அதிரநட மாடு மயிலே
அரகரா என்றுமால் பிரமருடன் முனிவரும்
அர்ச்சிக்க வந்த மயிலே

தண்டையொடு கிண்கிணீ சிலம்பொடு முழங்கவே
தாண்டவம தாடு மயிலே
தர்க்கமிடு சூரனுடல் சுக்குநூ றாகவே
சாரிவரு தோகை மயிலே

கண்டவொரு பேய்பூத பிரமராட் சதர்களைக்
கதறிட மிதிக்கு மயிலே
கரடிபுலி யாளியோ டுக்ரகா லாக்னியைக்
கண்கொண் டெரிக்கு மயிலே

தெண்டனிட் டேபணியும் அடியவர்கள் ஈடேறு
செயலுகந் தாடு மயிலே
திருப்போரி நகரில்வளர் கந்தப்பர் ஏறிவரு
சித்ரக் கலாப மயிலே.

---

* இக்குறியிட்ட 13, 14 இரண்டு பாடல்களும் சென்னை அரசாங்கக் கையெழுத்துப் பிரதி நிலையத்து ஏட்டுப் பிரதி Accession No. D H 30/24 இலிருந்து கண்டெடுத்துச் செப்பனிட்டு அச்சிடப்பெற்றுள ; மற்றைப் பாடல்கள் கிடைக்கவில்லை ; ஆசிரியர் பெயரும் தெரியவில்லை ; ஆசிரியர் அருணகிரியாராக இருந்திருக்க முடியாதென ஒருவாறு துணிந்து கூறலாம்.

(II)

14

வாடித் தவிக்கின்ற ஏழையடி யேனுடை
மனத்துய ரகற்று மயிலே
வையா புரிக்குமரன் ஏறிவிளை யாடிவரு
மனவேக மான மயிலே

பாடிப் படிக்கவே என்றனுடை நாவினிற்
பரதநட மாடு மயிலே
பன்னுமறை நான்குமே அருணகிரி நாதர்
பகர்ந்துதுதி செய்யு மயிலே

கோடிசூர் யப்ரபையர் தெய்வானை வள்ளிசிவ
குமரற் குகந்த மயிலே
குன்றைத் தொளைத்துநக் கீரரைக் காக்கக்
குதித்தோடி வந்த மயிலே

தேடித் திகைத்திடா தெனதுகோ ரிக்கையைச்
சீக்ரநிறை வேற்று மயிலே
திருப்போரி நகரில்வளர் கந்தப்பர் ஏறிவரு
சித்ரக் கலாப மயிலே.

உ

அருணகிரிநாத சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

# உ. *வேல்  விருத்தம்

(பதினான்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

15

மகரம்அள றிடைபுரள உரககண பணமவுலி
மதியம்இர வியுமலைய வே
வளர்எழிலி குடர்உழல இமையவர்கள் துயர்அகல
மகிழ்வுபெற இருசிறைய வாம்
சிகரவரை மனமறுக மறுகுதொறும் நுளைமகளிர்
செழுநெலொடு தரளமிட வே
சிகரபகி ரதிமுதல நதிகள்கதி பெறஉததி
திடர்அடைய நுகரும் வடிவேல்
தகரம்ருக மதம்இதென மணமருவு கடகலுழி
தருகவுளும் ஒருவெள் எயிறும்
தழைசெவியும் நுதல்விழியும் உடையஒரு
தருதுணைவன் அமரர் குயிலும் [கடவுள்மகிழ்

---

* இவ்வேல் விருத்தம் சென்னை அரசாங்கக் கையெழுத்துப் பிரதி நிலையத்து ஓலை யேட்டுப்பிரதி எண் D 1672-உடன் ஒத்திட்டுப் பார்த்துச் செப்பனிட்டு ஈண்டு அச்சிடப் பெற்றுள்ளது.

குகரமலை எயினர்குல மடமயிலும் எனும் இருவர்
குயமொடமர் புரியு முருகன்
குமரன் அறு முகவன் இகல் நிருதர்நிசி சரர் அணிகள்
குலையவிடு கொடிய வேலே. (1)

16

வெங்காள கண்டர்கைச் சூலமும் திருமால்தன்
வெற்றிபுனை சுடராழி யும்
விபுதர்பதி குலிசமும் சூரன் கலங்கவலி
வெல்லா எனக்கருதி யே
சங்க்ராம நீஜயித் தருளெனத் தேவரும்
சதுர்முகனும் நின்றிரப் பச்
சயிலமொடு சூரன் உடல் ஒருநொடியில் உருவியே
தனிஆண்மை கொண்ட நெடுவேல்
கங்காளி சாமுண்டி வாராகி இந்த்ராணி
கௌமாரி கமலா சனக்
கன்னிநா ரணிகுமரி திரிபுரைக பாலிஉமை
கௌரிகா மாட்சி விசையை
சிங்காரி யாமளை பவாநிகார்த் திகைபரை
த்ரியம்பகி அளித்த செல்வன்
சிறுவன் அறு முககுமரன் நிசிசரர் குலாந்தகன்
செம்பொற் றிருக்கை வேலே. (2)

17

வேதாள பூதமொடு காளராத் திரிகளும்
வெகுவித பசாச கணமும்
வெங்கழு குடன்கொடி பருந்துசம் பூகமும்
வெம்பசி ஒழிக்க வந்த

ஆதார கமடமும் கணபண வியாளமும்
அடக்கிய தடக்கிரி எலாம்
அலையநடம் ஆடிவரு தானவர் நிணத்தசை
அருந்திப் புரந்த வைவேல்

தாதார் மலர்ப்பொழிற் பழநிமலை சோலைமலை
தண்பரங் குன்றேரகம்
தணியல்செந் தூரிடைக் கழிஆவி னன்குடி
தடங்கடல் இலங்கை தன்னிற்

போதாரும் வார்வயற் கதிர்காமம் நாடொறும்
புகழுமால் நாவில் இன்பப்
புந்தியில் அமர்ந்தவன் கந்தன்முரு கன்சமர
புங்கவன் செங்கை வேலே. (3)

18

அண்டர்உல கஞ்சுழல எண்டிசைக ளுஞ்சுழல
அங்கியும் உடன்சுழலவே
அலைகடல்க ளுஞ்சுழல அகிலபுவ னஞ்சுழல
அவுணர்உயி ருஞ்சுழலவே

மண்டலம் நிறைந்தமதி சதகோடி உமிழ்நிலவை
மானப் பிறங்கி யணியும்
மணிஒலியி னிற்சகல தலமுமரு ளச்சிரம
வகைவகையி னிற்சுழலும் வேல்

தண்டமுட னுங்கொடிய பாசமுட னுங்கரிய
சந்தமுட னும்பிறைகள் போல்
தந்தமுட னுங்கழலும் வெங்கணுட னும்பகடு
தன்புடை வருஞ்சமனை நான்

கண்டுகுலை யும்பொழுதில் அஞ்சலெலன மென்சரண
கஞ்சம்உத வுஞ்சமர வேள்
கந்தன்முரு கன்குமரன் வனபுதல்வர் தம்புதல்வி
கண்கள்எழில் கொண்ட வேலே. (4)

19

ஆலமாய் அவுணருக் கமரருக் கமுதமாய்
ஆதவனில் வெம்மை ஒளிமிக்
கரிய தவ முனிவருக் கிந்துவிற் றண்ணென்
றமைந்தன் பருக்கு முற்று

மூலமாய் அவர்கள்வெம் பகையினைச் சிகையற
முடித்திந் திரர்க்கும் எட்டா
முடிவில்ஆ நந்தமும் அளித்தண்ட ரண்டமூ
தண்டமும் புகழும் வைவேல்

ஏலமால் ஆனையின் கோடதிற் சொரியுமுத்
தினபணிகள் உமிழு மணிவெற்
பினிற்றரள மான்மதம் வயிரம்வயி டூரியம்
இலங்க நறவம் வடாரம்

சாலமா மலர்முதற் பொருள்படைத் திடும்எயினர்
தருபலிக் குரவை அயரும்
தனிநடம் கண்டுமகிழ் குகன்முருகன் அறுமுகன்
சரவணக் குமரன் வேலே. (5)

20

பந்தாட லிற்கழங் காடலிற் சுடர்ஊசல்
பாடலினொ டாடலின் எலாம்
பழந்தெவ்வர் கட்கந் துணித்திந்தி ரற்கரசு
பாலித்த திறல்புகழ்ந் தே

சந்தான நாள்மலர்க் குழலரம் பையர்களுஞ்
சசியும்இவர் அநவரதமும்
தன்னை அன் பொடுபாடி ஆடும்ப்ர தாபமுந்
தலைமையும் பெற்ற வைவேல்

மந்தா கினித்தரங் கச்சடில ருக்கரிய
மந்த்ரஉப தேசம் நல்கும்
வரதேசி கன்கிஞ்சு கச்சிகைஅ லங்கார
வாரணக் கொடிஉயர்த் தோன்

கொந்தார் மலர்க்கடம் புஞ்செச்சை மாலையுங்
குவளையுஞ் செங்காந் தளுநங்
கூதாள முந்தொடுத் தணியுமணி மார்பினன்
கோலத் திருக்கை வேலே. (6)

21

அண்டங்கள் ஒருகோடி ஆயினுங் குலகிரி
அநந்தமா யினுமே வினால்
அடையஉரு விப்புறம் போவதல் லதுதங்கல்
அறியாது சூரன் உடலைக்

கண்டம் படப்பொருது காலனுங் குலைவுறுங்
கடியகொலை புரியு மதுசெங்
கனகா சலத்தைக் கடைந்துமுனை யிட்டுக்
கடுக்கின்ற துங்க நெடுவேல்

தண்டந் தனுத்திகிரி சங்குகட் கங்கொண்ட
தாமரைக் கையன் மாயன்
தழல்விழிக் கொடுவரிப் பருவுடற் பஃறலைத்
தமனியச் சுடிகை அணைமேல்

வண்டொன்று கமலத்து மங்கையுங் கடலாடை
மங்கையும் பதம்வருட வே
மதுமலர்க் கண் துயில் முகுந்தன்மரு கன்குமரன்
வாகைத் திருக்கை வேலே. (7)

22

மாமுதல் தடிந்தன்றி லங்கிரியி னூடுபோய்
வலியதா னவன்மார் பிடம்
வழிகண்டு கமலபவ னத்தனைச் சிறையிட்டு
மகவான் தனைச்சிறை விடுத்

தோமஇரு டித்தலைவர் ஆசிபெற் றுயர்வானில்
உம்பர்சொற் றுதிபெற்று நா
உடையகீ ரன்தமிழ்ப் பாமாலை பெற்றுலகில்
ஒப்பில்புகழ் பெற்ற வைவேல்

சோமகல சப்ரபா லங்கார தரசேட
சூடகா லாந்தக மகா
துங்கஇட பாரோக ணக்கட்க சூலதர
துரிதசர சர்மாம் பரச்

சேமவடி வாம்புயக ஆபரண சங்கர
திகம்பர த்ரியம்பக மகா
தேவஜெய நந்தன கஜானன சகோதரன்
செம்பொற் றிருக்கை வேலே. (8)

23

தேடுதற் கரிதான நவமணி அழுத்தியது
தினகரனை முதலான கொள்
செயமளித் தருளெமக் கெனஉவப் பொடுவந்து
சேவடி பிடித்த தெனவும்

நீடுமைக் கடல்சுட் டதற்குடைந் தெழுகடலும்
நீளமைக் காத்தி எனவும்
2

நீபிட முடி நெடியகிரி எந்தமைக் காஎனவும
நிகழ்கின்ற துங்க நெடுவேல்
ஆடுமைக் கணபணக் கதிர்முடித் தொளைஎயிற்
றழல்விழிக் கொடிய உக்ரத்
தடுசினப் படுகொலைக் கொடியகட் செவியனுக்
கரசினைத் தனிஎடுத்தே
சாடுமைப் புயலெனப் பசுநிறக் கிரியெனத்
தரைநெளித் திடநடிக் குஞ்
சமரமயில் வாகனன் அமரர்தொழும் நாயகன்
சண்முகன் தன்கை வேலே. (9)

24

வலாரிஅலல் ஆகுலம் நிலாதகல வேகவியன்
மால்அரியும் நாலு நிலைநூல்
வலான்அலை இலான்அலை விலான்மலை விலான்இவர்
மஞ்ஞெலய உலாசம் உறவே
உலாவரு கலோலமக ராலய சலாகரம்
உலோகநிலை நீர்நிலை உலா
வுலோகவலி சாலசுரர் லோகம்அனல் ஏறிட
உலோகிதம் நிலாவு கொலைவேல்
சிலாவட தலோதய கலாலடி யுளார்குரு
சிலீமுக விலோசனி விலார்
சிலாமலர் எலாமதிய மோதிமதி சேலொழி
சிலாதலி கலாப முகில்தன்
விலாசகலி யாணகலை மேருமுலை சோபமிட
மேவிய விலாச அகலன்
விலாழியி னிலாழியகல் வானில்அனல் ஆரவிடு
வேழம்இளை ஞன்கை வேலே. (10)

(வேல் விருத்தம் முற்றிற்று)

அருணகிரிநாத சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

# 3.‡ சேவல்  விருத்தம்

காப்பு

25

(பன்னிரு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

கொந்தார் குழல்வரி வண்டோ லிடுமியல்
கொண்டேழ் இசைமருளக்
குதலை மொழிந்தன கவுரீ சுதந்தரி
குமரன் இதம்பெறுபொற்

செந்தா மரைதடம் நந்தா வனமுள
செந்தூர் எங்குமுளான்
திலக மயிலில்வரு குமரன் வரிசைபெறு
சேவல் தனைப்பாட

---

‡ இச் சேவல் விருத்தம், திருவான்மியூர்க் கலா க்ஷேத்ராவி லுள்ள தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யரவர்களுடைய நூல் நிலையத்து 914 எண்ணுள்ள ஓலையேட்டுப் பிரதியுடன் ஒத்திட்டுப் பார்த்துப் பரிசிலனை செய்யப்பெற்றும், செப்பனிடப் பெற்றும் ஈண்டு அச்சிடப்பட்டுள்ளது.

வந்தே சமர்பொரு மிண்டா கியகய
மாமுக னைக்கோறி
மாவெயி றொன்றை ஒடித்துப் பாரதம்
மாமே ருவில்எழுதிப்
பைந்தார் கொடுபல ராவணன் அன்பொடு
பணிசிவ லிங்கமதைப்
பார்மிசை வைத்த விநாயகன் முக்கட்
பரமன் துணையாமே.

## நூல்

(பதினான்கு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

26

உலகிலநு தினமும்வரும் அடியவர்கள் இடரகல
உரியபர கதிதெரிய வே
உரகமணி எனஉழலும் இருவினையும் முறைபடவும்
இருள்கள்மிடி கெடஅருளி யே
கலகமிடும் அலகைகுறள் மிகுபணிகள் வலிமையொடு
கடினமுற வரில்அவை களைக்
கண்ணைப்பிடுங்கியுடல் தன்னைப் பிளந்துசிற
கைக்கொட்டி நின்றாடு மாம்
மலைகள்நெறு நெறுநெறென அலைகள்சுவ றிடஅசுரர்
மடியஅயில் கடவு முருகன்
மகுடவட கிரியலைய மலையுமுலை வநிதைகுற
வரிசையின மகளவ ளுடன்
சிலைகுலிசன் மகள்மருவு பயமில்வரு சரவணச்
சிறுவன்அயில் உருவி இரவீச் [வன்
சிரமிசையில் வெகுசினமொ டடியுதவும் அறுமுக
சேவற் றிருத் துவசமே. (1)

27

எரியனைய நயனவிரம் உளகழுது பலபிரம
ராட்சதம மிண்டுகள் செயும்
ஏவற் பசாசுநனி பேயிற் பசாசுகொலை
ஈனப் பசாசு களையும்

கரிமுரடு பெரியமலை பனையெனத முனையின்உயிர்
ககனமுற நிமிரும் வெங்கட்
கடிகளையும் மடமடென மறுகிஅல றிடஉகிர்
கதிர்த்தடர்த் துக்கொத்து மாம்

தரணிபல புவனமத கரிகள்குல கிரிகள்பணி
சமணர்கிடு கிடென நடனம்
தண்டைகள் சிலம்புகள் கலின்கலின் எனச்சிறிய
சரணஅழ கொடுபுரியும் வேள்

திரிபுரம தெரியநகை புரியும்இறை யவன்மறைகள்
தெரியும்அரன் உதவு குமரன்
திமிரதின கரமுருக சரவண பவன்குகன்
சேவற் றிருத் துவசமே. (2)

28

ஷை வேறு

கரிமுரட் டடிவலைக் கயிறெடுத் தெயிறுபற்
களையிறுக் கியுமுறைத் துக்
கலகமிட் டியமன்முற் கரமுறத் தொடருமக்
காலத்தில் வேலு மயிலும்

குருபரக் குகனுமப் பொழுதில்நட் புடன்வரக்
குரலொலித் தடியர் இடரைக்

குலைத்தலறு மூக்கிற் சினப்பேய் களைக்கொத்தி
வட்டத்தில் முட்ட வருமாம்

அரியகொற் கையனுடற் கருகும்வெப் பகையையுற்
பனமுரைத் ததமமிக்க
அமணரைக் கழுவில்வைத் தவருமெய்ப் பொடிதரித்
தவனிமெச் சிடஅருள் தரச்

சிரபுரத் தவதரித் தவமுதத் தினமணிச்
சிவிகைபெற் றினிய தமிழைச்
சிவனயப் புறவிரித் துரைசெய்விற் பனன்இகற்
சேவற் றிருத் துவசமே. (3)

29

ஷை வேறு

அச்சப் படக்குரல் முழக்கிப் பகட்டியல
றிக்கொட்ட மிட்டம ரிடும்
அற்பக் குறப்பலிகள் வெட்டுக்கள் பட்டகடி
அறுகுழை களைக்கொத் தியே

பிச்சுச் சினத்துதறி எட்டுத் திசைப்பலிகள்
இட்டுக் கொதித்து விறலே
பெற்றுச் சுடர்ச்சிறகு தட்டிக் குதித்தியல்
பெறக்கொக் கரித்து வருமாம்

*பொச்சித் திறப்பலவும் உட்கத் திரைச்சலதி
பொட்டைக் கதித்தயில் வீடும்
புத்திப் ப்ரியத்தன்வெகு வித்தைக் குணக்கடல்
புகழ்ச்செட்டி சுப்ர மணியன்

---

* பொச்சித்து இற - வெளிப்படுத்தப்பட்ட தண்ணீர் வறண்டு இற்றுப்போக. பலவும் உட்க - கடலில் வாழும் உயிர்கள் பலவும் இறக்க.

செச்சைப் புயத்தன்நவ ரத்னக் க்ரிடத்தன்மொழி
தித்திக்கு முத்தமிழினைத்
தெரியவரு பொதிகைமலை முனிவர்க் குரைத்தவன்
சேவற் றிருத் துவசமே. (4)

30

தானய் இடும்புசெயு மோகினி இடாகினி
தரித்தவே தாள பூதம்
சருவகு னியமுமங் கிரியினல் உதறித்
தடிந்துசந் தோட முறவே
கோனகி மகவானும் வானள வானுடர்
குலவுசிறை மீள அட்ட
குலகிரிகள் அசுரர்களை பொடியாக வெஞ்சிறைகள்
கொட்டியெட் டிக்கூவு மாம்
மானகம் அக்கறுகு மானுட நிர்த்தமிடு
மாதேவன் நற்குரு பரன்
வானீர் †பவாநியழல் காலாய் நவக்கிரக
வாழ்நாள் அனைத்தும் அவனும்
சேனு பதித்தலைவன் வேதா வினைச்சிறைசெய்
தேவாதி கட்கரசு கட்
டேனுன மைக்கடலில் *மீனய் உதித்தவன்
சேவற் றிருத் துவசமே. (5)

---

† நீர், பவாநி – ஒரு பொருள் இருசொல். நான்கு பூதங்கள் கூறப்பெற்றமையின், உபலட்சணத்தால் பூமியையுங் கொள்க.

* முருகர் மீனனது:
'மகரப் பெருமா ளெனும் வீரா'; 'தத்து திரைக்கடலிற்புகு நற்சுற வெனும்வீரா'
—(அழகு முத்துப் புலவர் பாடிய) திறப்புகழ் 93; 86.

(தொடர்ச்சி – அடுத்த பக்கம் கீழ்க் குறிப்புப் பார்க்க)

31

பங்கமா கியவிட புயங்கமா படமது
 பறித்துச் சிவத்த ருந்திப்
 பகிரண்ட முழுதும் பறந்துநிர்த் தங்கள்புரி
 பச்சைக் கலாப மயிலைத்

துங்கமாய் அன்புற்று வன்புற் றடர்ந்துவரு
 தொடரும் பிரேத பூதத்
 தொகுதிகள் பசாசுகள் நிசாசரர் அடங்கலும்
 துண்டப் படக்கொத்து மாம்

மங்கையா மளைகுமரி கங்கைமா தவிகவுரி
 வஞ்சிநான் முகிவ ராகி
 மலையரையன் உதவுமயில் திருமுலையில் ஒழுகுபால்
 மகிழஅமு துண்ட பாலன்

செங்கண்மால் மதலையிடம் இங்குளான் என்னுநர
 சிங்கமாய் இரணிய னுடல்
 சிந்தஉகி ரிற்கொடு பிளந்தமால் மருமகன்
 சேவற் றிருத் துவசமே. (6)

---

“ தந்தைக் குபதேசஞ் சாற்றினேன் அப்பனுக்கு
விந்தைக் குருக்களென்றார் மேதினியோர்—தந்தைவெகுண்
டானலும் பிள்ளை அதிகப் ப்ரசங்கியென்று
மீனுக்கி யேகடலில் விட்டுவிட்டார்”

—முத்தப்பர் பாடிய திருமுகவிலாசம்—பக்கம் 16.

“ மகர மீனமாய் மறிதி ரைக்கடற்
புகுதி யென்றுபின் புனைபைங் கோதையை
நிகரில் கற்பினய் நின்று பேட்சையால்
குகனி ருந்தனன் குழைமென் கூந்தலின் ”

—திருவுத்தர கோசமங்கைப் புராணம்
—11 வலைவீசும் அத்தியாயம்—4.

32

வீருன காரிகதி முன்ஞேடி பின்ஞேடி
வெங்கட் குறும்புகள் தரும்
விடுபேய்க ளேகழுவன் கொலைசாவு கொள்ளிவாய்
வெம்பேய் களைத் துரத்திப்

பேருன 'சரவண பவா'என்னு மந்திரம்
பேசிஉச் சாட னத்தாற்
பிடர்பிடித் துக்கொத்தி நகநுதியி ஞலுறப்
பிய்ச்சுக் களித்தாடு மாம்

மாருத முயலகன் வயிற்றுவலி குன்மம்
மகோதரம் பெருவி யாதி
வாதபித் தஞ்ச்லேற் பனங்குட்ட முதலான
வல்லபிணி களைமாற் றியே

சிருத ஓரா று திருமுக மலர்ந்தடியர்
சித்தத் திருக்கு முருகன்
சிலைகள்உரு விடஅயிலை விடுகுமர குருபரன்
சேவற் றிருத் துவசமே. (7)

33

வந்தார்ப் பரிக்குமம் மிண்டுவகை தண்டதரன்
வலியதூ துவர்பில்லி பேய்
வன்சிறை மகாபூதம் அஞ்சிஅஞ் சியும்வதற
வாயினும் காலி ஞலும்

பந்தாடி யேமிதித் துக்கொட்டி வடவைசெம்
பவளமா கதிகாச மாப்
பசுஞ்செஞ் சிறைத்தலம் அசைத்தசைத் தன்பரைப்
பார்த்தன் புறக்கூவு மாம்

முந்தா கமப்பலகை சங்காக மத்தர்தொழ
முன்பேறு முத்தி முருகன்
முன்கா னகத்தெயினர் பண்டோட விற்கணை
முனிந்தே தொடுத்த சிறுவன்

சிந்தா குலத்தையடர் கந்தா எனப்பரவு
சித்தர்க் கிரங்கறு முகன்
செயவெற்றி வேல்கொடமர் மகுடத்தன் வாகுற்ற
சேவற் றிருத் துவசமே. (8)

34

உருவாய் எவர்க்குநினை வரிதாய் அனைத்துலகம்
உளதாய் உயிர்க்குயிர தாய்
உணர்வாய் விரிப்பரிய உரைதேர் பரப்பிரம
ஒளியாய் அருட்பொருள தாய்

வருமீச னைக்களப முகனு தரித்திசைய
வலமாய் மதிக்க வருமுன்
வளர்முருக னைக்கொண்டு தரணிவலம்வந்தான்முன்
வைகுமயி லைப்புகழு மாம்

குருமா மணித்திரள் கொழிக்கும் புனற்கரைக்
குன்றுதோ றுடல் பழனம்
குலவுபழ முதிர்சோலை ஆவினன் குடிபரங்
குன்றிடம் திருவே ரகம்

திரையாழி எறிதரங் கத்திவலை சிந்தித்
தெறித்திடும் செந்தி நகர்வாழ்
திடமுடைய குடவயிறன் இளையபழை யவன்உற்ற
சேவற் றிருத் துவசமே. (9)

35

மகரசல நிதிசுவற உரகபதி முடிபதற
மலைகள் கிடு கிடுகி டெனவே
மகுடகுட வடசிகரி முகடுபட படபடென
மதகரிகள் உயிர்சிதற வே

ககனமுதல் அண்டங்கள் கண்டதுண் டப்படக்
கர்ச்சித் திரைத்தலறி யே
காரைப் பிளந்தசுரர் மாரைப் பிளந்துசிற
கைக்கொட்டி நின்றுடு மாம்

சுகவிமலை அமலைபரை இமையவரை தருகுமரி
துடியிடைய நகைஅசலை யாள்
சுதன்முருகன் மதுரமொழி இபவநிதை குறவநிதை
துணைவன்என இதய நிலையோன்

திகுடதிகு டதிதிகுட தகுடதித குடதிகுட
செககண நகக்கண எனத்
திருநடனம் இடுமயிலில் வருகுமர குருபரன்
சேவற் றிருத் துவசமே. (10)

36

பூவியென் வாசவன் முராரிமுநி வோரமரர்
பூசனைசெய் வோர்மகிழ வே
பூதரமும் எழுகடலும் ஆடஅமு தூறஅநு
போகபதி ஞாலு லகமும்

தாவுபுகழ் மீறிட நிசாசரர்கள் மாளவரு
தானதவ நூல்தழைய வே
தாள்வலிய தானபல பேயகல வேசிறகு
தட்டிக் குரற்பயிலு மாம்

காவுகனி வாழைபுளி மாவொடுயர் தாழைகமு
  காடவிகள் பரவு நடனக்
காரணமெய்ஞ் ஞானபரி பூரண விராசனக்
  கனகமயில் வாகனன் அடற்

சேவகன் இராசத குணாளன்உமை பாலக
  சிகாமணி சரோருக முகச்
சீதள குமாரகிரு பாகர மனோகரன்
  சேவற் றிருத் துவசமே. (11)

(சேவல் விருத்தம் முற்றிற்று)

---



—உதவி - திருப்புகழடிமை - கா. ரா. முருகேசம் பிள்ளை.

## திரு எழுகூற்றிருக்கையைப் பற்றிய

# குறிப்பு

---

திரு எழுகூற்றிருக்கை: இதன் சிறப்பு ஆய்தற்பாலது; "புகலியில் வித்தகர்போல........அமிர்தகவித் தொடைபாட அடிமை தனக் கருள்வாயே" (திருப். 169) என வேண்டிய வாறே, புகலிவித்தகர் (சம்பந்தப் பெருமான்) திரு எழுகூற்றிருக்கை பாடியவாறே தாமும் முருகவேளுக்கு இத் திரு எழுகூற்றிருக்கையைப் பாடித் தமது ஆண்டவனுக்குச் சமர்ப்பித்தனர் அருணகிரியார்; இக்காரணம்பற்றிச் சம்பந்தர் பாடியுள்ள திரு எழுகூற்றிருக்கையிலுள்ள ஒரு தனிச் சிறப்பு *அருணகிரியார் பாடியுள்ள திரு எழுகூற்றிருக்கைக்கும் உண்டு என்பது போதரும்; ஞானசம்பந்தப் பெருமானுடைய திருப்பதிகங்களை நாடோறும் ஓதிப் பயின்று வந்த அவர் தந்தையார்-சிவபாத இருதயர்-அவை நாடோறும் பெருகிவர அங்ஙனம்முற்றும் பயில இயலாது வருந்த அவர் பொருட்டுச் சம்பந்தர் திரு எழுகூற்றிருக்கையைப் பாடியருளி அஃது ஒன்றையே விதிப்படி ஓதினால், எல்லாப் பதிகங்களையும் ஓதிய பயன் கிடைக்கும் என்று ['எந்தைக் கெழுகூற்றிருக்கை'—பெரிய புரா. சம். 276.] அறுதியிட்டு உரைத்தனராம். அதுபோல அருணகிரியாரது பதினாறாயிரம் திருப்புகழையும் ஓதும் நியமத்தால் வரும் பயன் அவரருளிய இந்தத் திரு எழுகூற்றிருக்கை ஒன்றைப் பாராயணம் செய்யும் நியமம் ஒன்றினாலேயே பெறலாகும் என்பது வெள்ளிடை மலைபோலத் தெள்ளிதில் உணரலாம் என்க" என்றெழுதி யிருப்பதன் விவரத்தைத் திரு எழுகூற்றிருக்கை ரதபந்தப் படத்துடன், முருகவேள் பன்னிரு திருமுறை - தொகுதி 5-ல் 682-688 பக்கங்களிற் காணலாம்.

---

*இதரத் திரு எழுகூற்றிருக்கைகள்: (ஆசிரியர்கள்)

1. மதுரைப் பரிபூரண விநாயகர்மீது
—பாலகவி எம். சே. வேங்கடராமனார்.
2. சீகாழிச் சிவபிரான்மீது—திருஞான சம்பந்தர்.
3. சிவபெருமான்மீது—நக்கிர தேவ நாயனார்.
4. வடமுல்லைவாயில் வைஷ்ணவி தேவிமீது
—அருட்கவி எஸ். வி. சேதுராமனார்.
5. திருக்குடந்தைத் திருமால்மீது—திருமங்கையாழ்வார்.
6. நம்மாழ்வார்மீது—மாறனலங்கார ஆசிரியர்.

உ

திருத்தணிகேசர் துணை

அருணகிரிநாத சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

# 4. திரு எழுகூற்றிருக்கை

(நேரிசை ஆசிரியப்பா)

37

ஓருரு வாகிய தாரகப் பிரமத்
தொருவகைத் தோற்றத் திருமர பெய்தி
ஒன்றாய் ஒன்றி இருவரில் தோன்றி
மூவா தாயினை ; இருபிறப் பாளரின்
ஒருவ னாயினை ; ஓராச் செய்கையின்

இருமையின் முன்னாள் நான்முகன் குடுமி
இமைப்பினிற் பெயர்த்து மூவரும் போந்து
இருதாள் வேண்ட ஒருசிறை விடுத்தனை ;
ஒருநொடி யதனில் இருசிறை மயிலின்
முந்நீர் உடுத்த நானிலம் அஞ்ச

நீவலஞ் செய்தனை ; நால்வகை மருப்பின்
மும்மதத் திருசெவி ஒருகைப் பொருப்பன்
மகளை வேட்டனை ; ஒருவகை வடிவினில்
இருவகைத் தாகிய மும்மதன் தனக்கு
மூத்தோ னாகி நால்வாய் முகத்தோன்

ஐந்துகைக் கடவுள் அறுகு சூடிக்
இளையோ னாயினை ; ஐந்தெழுத் ததனில்
நான்மறை யுணர்த்தும் முக்கட் சுடரினை
இருவினை மருந்துக் கொருகுரு வாயினை ;
ஒருநாள் உமைஇரு முலைப்பால் அருந்தி

முத்தமிழ் விரகன் நாற்கவி ராஜன்
ஐம்புலக் கிழவன் அறுமுகன் இவன்என
எழுதரும் அழகுடன் கழுமலத் துதித்தனை
அறுமீன் பயந்தனை ஐந்தரு வேந்தன்
நான்மறைத் தோற்றத்து முத்தலைச் செஞ்சூட்

டன்றி லங்கிரி இருபிள வாக
ஒருவேல் விடுத்தனை ; காவிரி வடகரை
மேவிய குருகிரி இருந்த ஆறெழுத்
தந்தணர் அடியிணை போற்ற
ஏரகத் திறைவன் எனஇருந் தனையே.

(திரு எழுகூற்றிருக்கை முற்றிற்று)

உ

## அருணகிரிநாத சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

# பழநித் திருப்புகழ்

## அடிமையாக

திமிர உததி அனைய நரக
ஜெனனம் அதனில் விடுவாயேல்-

செவிடு குருடு வடிவு குறைவு
சிறிது மிடியும் அணுகாதே;

அமரர் வடிவும் அதிக குலமும்
அறிவும் நிறையும் வரவேநின்-

அருள தருளி எனையு மனதொ
டடிமை கொளவும் வரவேணும்;

சமர முகவெல் அசுரர் தமது
தலைகள் உருள மிகவேநீள்-

சலதி அலற நெடிய பதலை
தகர அயிலை விடுவோனே;

வெமர வணையில் இனிது துயிலும்
விழிகள் நளிநன் மருகோனே-

மிடறு கரியர் குமர! பழநி
விரவும் அமரர் பெருமாளே.

உ

வேலும் மயிலுஞ் சேவலுந் துணை

# குறிப்புரை

(அருளிசை. S. V. சுப்ரமண்யம், சென்னை.)

## 1. மயில் விருத்தம்

1. காப்பு: பாளிதம்-குழம்பு; பச்சைக் கற்பூரம். ம்ருக மதம்-கஸ்தூரி. கடகம்-தோள்வளை. சமரம்-போர். சிகாவலம்-மயில். கொந்தளபாரம்-கூந்தற்கட்டு. கிராதபுராதனி-பழைய வேடிச்சி; வள்ளி. கொண்க-கணவனே. கூதளம்-கூதாள மலர். சீதளம்-குளிர்ச்சி. குஞ்சரி - தேவசேனையம்மை. மஞ்சரி - பூங் கொத்துப் போல்வாளாகிய வள்ளியம்மை. கும்ப கடாசல-மத்தகத்தில் மதமூறும் மலையே. கோகநகக் கரமுக - தாமரை போன்ற கைகளும் முகவிலாசமும் உடையவனே! சாமரகர்ண-வெண்சாமரை அல்லது விசிறி போன்ற காதினனே! விளம் பிதசூத்ர-தொங்குகின்ற பூணூலை உடையவனே. கபோல மதம்-தாடையினின்றொழுகும் மதநீர். தெந்த மகோதர-தந்தத்தை யுடைய பெருவயிறனே. மூஷிகவாகன - பெருச்சாளி வாக னத்தை உடையவனே! சிந்துர-யானையே. பற்ப நுதல் - (பஸ் பம்) திருநீறு இட்டுக்கொண்டுள்ள நெற்றி. (அல்லது) சிந் துர பற்ப நுதல் - குங்குமமும் திருநீறும் இடப்பட்டுள்ள நெற்றி.

2. நூல்: சந்தான புஷ்ப பரிமள—(தெய்வலோகத்தருக் களுள் ஒன்றாகிய) சந்தான மரத்தின் பூவின் நறுமணம் வீசும். கிண்கிணீமுகச், சரண யுகள-கிண்கிணி என்னும் ஆபரணம் பூண்ட இரண்டு திருவடிகள். "கிண்கிணி முகுள சரண ப்ர தாப"-கந். அலங் 21. அமிர்தப்ரபா சந்த்ரசேகர-அமுதகதி ரோனாகிய சந்திரனைத் தலையில் தரித்துள்ள. மூஷிக ஆரூட-பெருச்சாளிவாகனத்தின் மேலேறிய. வெகு மோக சக்திப்ரிய ஆலிங்கன-மிகவும் அன்பும் ஆசையும் மிக்க பார்வதி தேவியால் ஆர்வத்தோடு மார்போடு மார்புறத் தழுவப்படுகின்ற. (அல் லது) மிகவும் மோகம் வைத்துள்ள, சித்தி, புத்தி, வல்லபை அல்லது திருமால் மகளிர் பன்னிருவர் ஆகிய சக்தியர்களால் ஆசையோடு கட்டித் தழுவப்படுகின்ற. சிந்தாமணிக் கலச கர-

சிந்தாமணி என்னும் ரத்தினத்தால் ஆன குடத்தைக் கையிற் கொண்டுள்ள. விநாயகர் தம் பெற்றோர்க்கு அபிஷேகம் செய்யும் பொருட்டு எப்போதும் தம் துதிக்கையில் ரத்னகலசத்தைத் தாங்கியிருப்பதாகத் தணிகைப் புராணத்து ஆபத்ஸஹாய விநாயகர்துதி கூறும். 'அரதனக் கலச வியன்கரம் தந்தைதாய்க் காக்கி.'' கட கபோல - கபோல கட - கபோல மதத்தை உடைய. த்ரியம்பக-முக்கண்ணுடைய. முதல்—முதலில். மந்தாகினி ப்ரபவ-கங்கையில் அவதாரம் செய்த. வர துங்க—மேம்பட்டவனும் பரிசுத்தமானவனுமான. விரதுங்க - வீரதுங்க-சுத்தவீரனை. வனசர உதய - சரவன உதய - சரவண தடாகத்தில் அவதரித்த, அல்லது வனசர - வேடுவனாக, உதய - (வள்ளி முன்) தோன்றின. க்ருத்திகா வரபுத்ர - கார்த்திகை மாதர்களுக்குச் சிரேஷ்டமான குழந்தைகளாகிய. ராஜீவ பர்யங்க—தாமரைப் படுக்கையை உடைய; அதாவது தாமரைத் தொட்டிலில் தவழ்ந்து விளையாடிய. இந்தீவர அசலன்-நீலோற்பல மலையாம் திருத்தணி மலையில் வாழ்பவன். இந்தீவரம்-உற்பலம். இந்த்ராணி மங்கல்ய தந்துரக்ஷ ஆபரணன்-இந்த்ராணியின் திருமங்கிலியக் கயிற்றைக் காத்துக்கொடுத்த அணிகலன் போன்றவன். ரக்ஷாபரணன்-காப்பாற்றும் பொறுப்பேற்றவன் எனலுமாம். "சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷாபரண'' - கந். அலங். 21. இகல்வேல் - பகைவர்களோடு மாறுபட்டுப் பொரும் வேலாயுதம். விநோதன்—அழகன். நீலக்ரீவ-நீலமான கழுத்தை உடைய. ரத்னப்ரவாள மயில்—ரத்னமும் பவழமும்போல வித விதமான ஒளி வீசி ஜ்வலிக்கும் மயில்.

3. ப்ரசண்ட சக்ரகிரி - வலிமை மிக்க சக்ரவாளகிரி. முட்ட-மேற் சென்று முட்ட. வெளிபட்டு - ஆகாசம் அழிய. தகர - தகர்ந்து பொடிபட. கனக சிகரச் சிலம்பு - பொன் முடியையுடைய மேருமலை. எழுதனி வெற்பு-சூரனோடு உலவி வரும் ஒப்பற்ற ஏழு குன்றுகள். எண் திக்குத் தடங்குவடு - விசாலமான அஷ்டகுலகிரிகள். ஒக்க - ஒத்தாற்போல். ஒரு சித்ரப்பதம் பெயர - அழகிய ஒரு திருவடியை அடிபெயர்த்துத் தூக்கினால். சேடன்-ஆதிசேடன். வெஞ்சூர் - கொடிய சூரர். பாகீரதி - கங்கை. சடில-சடையையுடைய. யோகீசுரர் - சிவபிரான். தணியல் - தணிகை. அல் - தொழிற் பெயர் விகுதி. கல்லாரகிரி - தணிகை. கலப கக திலக மயில் - பறவைகளுள் மேம்பட்டதான தோகையையுடைய மயில்.

4. ஆதார பாதாளம் - அனைத்துலகங்களையும் ஆதாரமாய் நின்று தாங்கும் பாதாள உலகம். முடி - பாதாளத்தின் முடியாகிய மண்ணுலகம். அடி - பாதாள லோகத்தின் அடிப்பாகம்

அதாவது பாதாளம் முழுவதுமே. அண்டமுகடு - வான உச்சியாகிய மேலுலகம்; விண்ணுலகம். அம்புயன் கை பெயர-தாளமிட்டுத்தாளமிட்டுப் பிரமனின் கை பெயர்ச்சியடைய. வேதாள தாளங்கள்-பூத வேதாளங்களின் கைத்தாளங்கள். ஆடுவார் - சிவபெருமான்; நடராஜர். விடாவித பவுரி - (பாராது) விட முடியாமற்படிக்கு நடைபெறும் கூத்து. விஸ்த்தார நிர்த்த - விரிவாக நடனமாடும். மாதாநுபங்கி-மாதா அநுபங்கி-தாயை அநுசரித்து நடக்கும் ஒழுங்கினன். எனும்-என்று பெயர்பெற்ற. வள்ளுவர் - வள்ளுவராய் அவதரித்த பிரமதேவன். வள்ளுவர்க்கு 'நான்முகனார்' என்றொரு பெயருண்டு. "நான்முகத்தோன் தான் மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த நூல்;" "தந்தான் உலகிற்குத் தான்வள்ளுவனாகி அந்தா மரைமேல் அயன்"—திருவள்ளுவமாலை - 4;28. சகோதரி-பிரமன், வள்ளி இருவரும் திருமாலின் மக்களாதலின் வள்ளி பிரமனின் தங்கையானாள். "விதியானவன் இளையாள்"—திருப்புகழ் 1185. மகீதரி - (வள்ளி) மலையிற் பிறந்தவள். கிராதர் - வேடர். மறைமுநி - சிவமுநிவராய் வந்த திருமால். சாரங்க நந்தினி-மானின் மகள். ஆரண மலர்ப் பாதாரவிந்த சேகரன்-வேதப்பூவாகிய பாத தாமரையை வணங்கித் தலைமேல் தரித்தவன். நிகரில் சிகர - ஒப்பற்ற மலையுச்சியுள்ள. கடகம்-சேனை. நடவு-செலுத்துகின்ற. வாகை - வெற்றி மிக்க.

5. உகவோடி முடிவு - கோடிக்கணக்கான யுகங்களின் முடிவு. மண்டிய - நிறைந்த. சண்டமாருதம் - பெரும் புயல். பொற்குவடு—மேருமலை. வெகு கோடி நககோடிகள்—கோடி கோடிக்கணக்கான பலமலைகள். அடி பறித்து—அடி பெயர்ந்து. விசும்பு-ஆகாயம். வேலை-கடல். சுவற - வறண்டுபோக. நக கோடி கொண்டு-கோடிக்கணக்கான(கைந்)நகங்களைக்கொண்டு அவுணன்—இரணியன். நரகேசரி - நரசிங்கம். சீதரன் - லக்ஷ்மியை மார்பில் தரிப்பவன். நந்தனன்-பிள்ளை. மருமான்-வழித்தோன்றல்; மருமகன். முககோடி நதிதரன் குரு-கோடிக்கணக்கான முகங்களாகப் பாய்ந்து செல்லும் கங்காநதியைத்தரித்த சிவபிரானின் குருநாதன். கோடி - புதுமையாக. அநவரதம் - தினந்தோறும். முகிழும் - பூக்கின்ற. நீல - நீலோற்பல மலரையுடைய. கிரி-தணிகைமலை. விகட—விநோதமான. தட—விசாலமான. மூரி - இளமையுடைய.

6. வேதண்டம்-மலை. தனி-ஒப்பற்ற. அபிநவை-புதியவள். கங்காளி-எலும்பணிந்தவள். நிரைசேர் - வரிசையான. மூதண்டம்-பழைய அண்டங்கள். பகிர் அண்டம் - வெளியி

லுள்ள அண்டங்கள். தனுது-தனது. பெடை-பெட்டைமயில். அண்டங்கள் எனவே - முட்டைகள் என்று. மறை ஓது அண்டர்-பூசுரர்; வேதியர். அண்டர் முப்பத்துமுக்கோடி-முப்பத்து முக்கோடி தேவர்கள். அண்டர் என்பதை இடை நிலைத் தீவகமாகக் கொள்ளவேண்டும். நித்தலும்-தினந்தோறும். நீலகிரி-நீலோற்பல மலை; தணிகை. நிராலம்பன் - வேறு பற்றுக்கோடு அற்றவன். நிர்ப்பாவன்-பாவனை கடந்தவன். நிர்வ்யாகுலன்-மனத்துன்பம் அற்றவன். திகிரி - சக்கரம். கோதண்டம்-வில். தண்டம் - கதை. மாதவன் - லக்ஷ்மீகாந்தன். மதுகைடப அரி-மது கயிடபர்களுக்குப் பகைவன். மதுகைவித-பலவித வலிமையுள்ள.

7. சங்கார காலம் - ஊழிக்காலம்; பிரளய முடிவு. கங்காளர் - பிரம, விஷ்ணுக்களின் எலும்பை அணிந்துகொண்டவர். போது - அப்போதைய. அந்தகாரம் — இருட்டு. ககன கூடம் - வானவெளி. மேலை முகடு - மேல் உச்சி விதானம். கற்றை-கொத்துக் கொத்தான. படீரம்-சந்தனம். ம்ருகமதம்-மான்மதம்; கஸ்தூரி. யுகளம் - இரண்டு. பயோதரம் - முலை. புநிதன்-தூய்மையன். மகீதரன்-மலைக்குரியவன். இரும் கெங்காதரன் — பெரிய கங்கையைத் தரித்தவன். மகராலய க்ருபாகரன்-கடல்போன்ற கருணைக்கு இருப்பிடமானவன். கடகம்-சேனை. முடிய - அழிய. நடாவு - நடத்துகின்ற.

8. தீர-முழுவதும். பயோதி-கடல். முடிமவுலி-தலைக் கிரீடம்; ஒரு பொருளிருசொல். வெம்சிகைகள் தீ கொப்புளிக்க — கொடிய உச்சியிலுள்ள படங்கள் நெருப்பைக்கக்க. வெருளும்-பயப்படும். பாரப் பணாமுடி - கனத்த ரத்தினத்தை முடியில் தரித்துள்ள. அநந்தன்-ஆதிசேடன். வையாளி-உலா. பச்சை - மரகதநிறம். ப்ரவாளம் - பவளநிறம். ஆரப்ரதாப - மாலைகள் சாத்தப்பெற்ற பெருமையுடைய. முகபட - ஆனையின் முகபடாம்போல் கச்சுக்களால் அழகுபடுத்தப் பெற்றுள்ள. கடின-கனமாகப் பருத்த. பாடீர-சந்தனம் பூசப்பெற்றுள்ள. அமிர்தகலசம்-பாற்குடம். ஆகம கலாவல்லி-சிவாகமங்கட்கும் சகல கலைகளுக்கும் தலைவி. ஜடாதார - ஜடையைத் தரித்துள்ள. குரு-தக்ஷிணாமூர்த்தி; சிவபிரான். உதரம்-வயிறு. விபுதர் - தேவர்.

9. செக்கர் - சிவப்பு. அபிடேகம் - திருமுடி. சிகாரத்நராசி-முடிமணிக் கூட்டம். நிரை - வரிசையாக. சிந்த - உதிர. புராரி அமிர்தம்-சிவபெருமான் அமுது செய்த ஆலகாலவிடம். திரிய - மீண்டும். பகு வாய்கள் - பிளவுபெற்ற வாய்கள்.

தீவிஷம் கொப்புளிப்ப-கொடிய விஷத்தைக் கக்க. சக்ரகிரி-சக்ரவாளகிரி. மண்டலிக்கும் - வட்டமாய் வளைந்துவரும். சருவசங்கார-அனைத்தையும் அழிக்கவல்ல. கோர-கொடுமையான. தறுகண்-வலிமை. பணமுகம் - ரத்தினம் தாங்கியமுகம். விக்ரம கிராதகுலி-வெற்றி மிக்க வேடுவர் குலத்தைச் சேர்ந்தவள். துரிசு-குற்றம். எனை-எனக்கு. எனை-நான் என்பதை எனினுமாம். துரகம் - குதிரை. கஜம் - யானை. ரதம் - தேர். கடகம்-சேனை; காலாட்படை. விகட - விநோதமான. தட நிருதர்-வலிமைமிக்க அசுரர். துஷ்ட நிஷ்டுர - கொடியவர்களுக்குக் கொடுமை செய்யும்.

10. சிகர தமநிய மேரு கிரி-மேன் முகட்டையுடைய பொன் மலையான மேருமலை. ரஜதகிரி-வெள்ளிமலை; கயிலாயம். நீல சிகரி-கருமலை அல்லது இந்திர நீல பர்ப்பதம். ஆயிரமுகத் தெய்வநதி-கங்கை காளிந்தி-யமுனை. நீழல்-நிழல்; ஒளி. நிகர்-ஒளி விடுகின்ற. இரவி-சூரியனையே. தனிநேமி-ஒப்பற்ற சக்ராயுதம். ககனமுகடு-வான உச்சி. விசிறி-மேற் பரந்து எழுந்து. அகரு-அகில். வனம்-காடு. அபிராமவேள்-அழகிய முருகவேள். அடையலர்கள் - பகைவர்கள். அலங்கல்-மாலை. குழாம்-கூட்டம். மகர கன கோமளக் குண்டலம்-பொன்னலான அழகிய மகரக்குழை. உரக பிலம்-நாகலோகமாகிய பாதாளம். வையாளி - திருவுலா. 'வையாளிப்பரி வாகன மாகொளு...மயில்வாழ்வே'-(திருப் 771.)

11. நிராஜத - முக்குணங்களுள் ஒன்றான ரஜோகுணம் இல்லாத. இராஜத விரோத - ராஜதகுணத்துக்கு மாறுபாடான சத்வகுணமுடைய. தபரிதிய-தவமுறையை உடைய. நிராகுலன் - கவலையற்றவன். நிராமய - நோயற்ற. நிலாது எழுதலால்-வேரூன்றி நில்லாது எழுந்து அழிந்து படுதலால். அறிவிலாநெறி நிலாநெறி - அறிவற்ற வழியிலே அமையாத நல்ல வழியிலே. நிலாவிய-பொருந்திய. உ(ல்)லாச-மகிழ்ச்சியுடைய. குரா மலி-குராமரத்தில் நிறைந்து. விராவு-கலந்து. உமிழ்-வெளியில் தோன்றும். பராரை-(அம் மரத்தின்) பருத்த அடிப்பாகத்தில். அமரா - அமர்ந்து. நிழல் - மரக்கொம்புகளோடு கூடிய. குராநிழல் - குராமரத்தின் ஒளி அல்லது குளிர்ச்சியானது. பராவு-பரவியிருக்கின்ற. குராமலி...தணிகை: தணிகையில் ஒரு காலத்தில் குராமரங்கள் மிகுந்து இருந்திருக்கவேண்டுமென இதனல் நினைக்கவேண்டியிருக்கின்றது. [குராமலி-(திருவிடைக்கழியில்) குராவடியில் வீற்றிருக்கின்ற. விராவு உமிழ்-கலக்கும்படி வெளித் தோன்றும். பராரைஅ-

பருத்த அடிப்பாகத்தையுடைய. மராநிழல்-கடப்பமரங்களின் நிழல். குராநிழல் - குராமரங்களின் நிழல் எனினுமாம்.] குலாசல-(தணிகையாகிய) சிறந்த மலைமுதலாக. சிலாதலம் எலாம்-குன்றுதோறுடல் எல்லாம். உலாவு இயல் குலாவிய-உலவுகின்ற இயல்பு குலவி நிறைந்துள்ள. புராரி-சிவபிரான். வரோதய-வரங்களுக்கு இருப்பிடமான. எனும் - எனத்துதிக்கின்ற. புராதன - பழைமையான. முராரி - திருமால். புலோமசை-இந்திராணி. சலாம் இடு-சலாம் இட்டு வணங்கும். சலாம்-திசைச்சொல். "சுராதிபதி மாலயனு மாலொடு சலாமிடு சுவாமிமலை வாழும் பெருமாளே" -திருப். 207. விலாசன்-பிரகாசத்தையுடையவன். விலாசன் அ(வ்)வலாரி எனப் பிரிக்க. வலாரி-வலாசுரனுக்குப் பகைவனான இந்திரன். புகலாய-தஞ்சம் அடைந்த அயிலாயுதன்-வேலாயுதனும் முருகன். இரும்-பெரிய. தராதலம்-பூமி. கிராதகுலி-வேடர்குலப் பெண்ணும் வள்ளி. ராகஅபிராமி-அன்புள்ள அழகி; இன்னிசை யழகி: நிறத்தால் அழகியவள். வல் தராத-(ஊடலின் போது) தன் சொக்கட்டான் காய் போன்ற கொங்கையை (முருகவேள் அணையும் பொருட்டுக்) கொடாத; வள்ளியினால் தரப்பெறாத. விநோதசமரன்-(பின்னர் ஊடல் நீங்கிய காலத்து வள்ளி மகிழத் தோள் கொடு அணைத்து) விநோதமான போரைச் செய்த முருகன். தடஅரி-(கிரவுஞ்ச) மலைக்குப் பகைவன் அல்லது மலையாகிய பகையாம் கிரவுஞ்சம். விகட அரி-மாறுபாடு கொண்ட பகைவனும் சூரன். குவடாதி-அச்சூரனோடு வந்த ஏழுமலைகள் இவற்றினுடைய. சுவடாதிகள்-ஆற்றல் முதலியன எல்லாம். சடார்என-திடீரென அழிந்துபடும்படி. சடார்-ஓர் ஒலிக் குறிப்பு. நடாவு-நடத்துகின்ற.

12. இந்த்ர நீலப் போது-நீலோற்பல மலர். இமையவர்கள் தம்பிரான்-தேவர்களுக்குத் தலைவன். நம் பிரான் - நம் தலைவன். அதிமதுரசித்ரப் பாடல்-மிக இனிமையான அழகிய பாக்கள். ஆசிரிய வ்ருத்தம்-ஆசிரிய விருத்தம். மறைநூல் மன்-வேதத்திற்கு அரசனும் பிரமன். அன்னம்-அன்னபக்ஷிவாகனம். வாணி-ஸரஸ்வதி. பால் மகராலயம்-பாற்கடல். மகராலயம்-கடல். உவணம் - கருடன். வாரீசன் மங்கை—வாரி ஈசன் மங்கை-சமுத்திர ராஜன் மகளாம் லக்ஷ்மி. அந்நாயகம்-அந்தத் தலைமைப் பதவியாகிய விஷ்ணு பதவி. அயிராவதம்-வெள்ளை யானை. அயிராணி-இந்த்ராணி. தோள் பெறுவர் என்றது இந்த்ர போகத்தைக் குறித்தது. பேர் அமுத அசனம்-பெரிய அமிருத உணவு. விழி ஆயிரம் - ஆயிரங் கண்களையுடைய இந்திர பதவி. அழியா வரம் - சாவாத மேல்நிலை.

## 2. திருப்போரூர்க் கந்தப்பர் மயில் விருத்தம்

13. சாரி-உலாவுகை; வட்டமாய் ஓடுதல். போரி-திருப்போரூர்.

14. வையாபுரி-பழநி. பரதநடம்-பரத நாட்டியம். மறை-வேதசாரமாம் திருப்புகழ்.

## 3. வேல் விருத்தம்

15. மகரம்-மகரமீன். அளறு - (கடற்) சேறு. உரககண பணமவுலி-ஆதிசேடனுடைய கூட்டமான ஆயிரம் படங்களின் உச்சி. எழிலி-மேகம். இருசிறை - பெருஞ்சிறகு அல்லது இரண்டு சிறகு. மறுகு-தெரு. நுளைமகளிர்-நெய்தல் நிலப் பெண்கள். சிகர பகிரதி - அலைகளையுடைய கங்கை. உததி-கடல். தகரம் - வாசனை மரவகை; வாசனைப் பண்டம். ம்ருகமதம் - கத்தூரி. கடகலுழி-மதநீர்ப் பெருக்கு. கவுள்-கன்னம். குகரம்-குகை. குயம்-கொங்கை; குய்யம் எனினுமாம். அணி-படை.

16. வெம் காளகண்டர் - விரும்பத்தக்க சிவபிரான் அல்லது கொடிய விடத்தைத் தரித்த சிவபெருமான். சங்க்ராம-போர்வீரனே! அல்லது சங்க்ராமம் - போரில், நீ ஜயித்தருள் என - (வேலே!) நீ வெற்றி பெறுக என்று.

17. காளராத்திரி-துர்க்கா சத்தியின் ஒரு பேதம். கொடி-காக்கை. சம்பூகம்-நரி. கமடம்-ஆமை. வியாளம் - பாம்பு. தணியல்-தணிகை. (அல்-தொழிற்பெயர் விகுதி).

18. அங்கி - வடவா முகாக்கினி. மான-போல. சிரமம் - ஆயுதப் பயிற்சி. தண்டம் - கதை. தந்தம் - பல். கழலும் வெங்கண்-(கோபத்தாற்) பிதுங்கி வெளிவரும் கொடியகண். பகடு - எருமைக்கடா. வனபுதல்வர் - நம்பிராஜர். புதல்வி - வள்ளி. கண்கள் எழில் கொண்ட வேலே "மறச்சிறுமி விழிக்கு நிகராகும்......வேலே"-(வேல் வகுப்பு-1.)

19. ஆலம்-விடம். தண்-குளிர்ச்சி. சிகை-சேடம்; பந்தம். ஏல-பொருந்த. மால்-பெரிய. இனபணிகள் உமிழு மணி-நாகப் பாம்புகள் உமிழ்ந்த நாகரத்தினம். இலங்கம்-இலவங்கம்-கிராம்பு. நறவம்-குங்கும மரம்; தேன். வடாரம்-வள்+தாரம்-

வளப்பம் பொருந்திய (அரிதாரம்) மஞ்சள். குரவை-குறவர் கூத்துவகை.

20. கட்கம்-வாள். சந்தானம் - ஐந்தருவில் ஒன்று. மந்தாகினி-கங்கை. தரங்கம்-அலே. கிஞ்சுகம் - சிவப்பு. கொந்து-பூங்கொத்து. செச்சை-வெட்சி. கூதாளம் - ஒருவகை மலர்.

21. அநந்தம்-பல. அடைய-முழுவதும். தங்கல்-தங்குதல். கண்டம்-துண்டம். கனகாசலம்-மேருமலே. கடுக்கின்ற-ஒப்பாகின்ற. தண்டம் - கதை. பரு - பருத்த. பஃறலேத் தமனியச் சுடிகை அணை - பொன்போன்ெருளிரும் பல தலேயுச்சிகளே யுடைய (ஆதிசேடனும்) படுக்கை. கடலாடை மங்கை-பூதேவி. வாகை-வெற்றி.

22. மா - மாமரம். அன்றில் அம் கிரி - அழகிய கிரவுஞ்ச மலே. கமல பவனத்தன்-பிரமன். மகவான்-இந்திரன். ஓமம்-வேள்வி; யாகம். இருடி-முனிவர். சேடசூட - ஆதிசேடனும் பாம்பைச் சூடிய. இடப ஆரோகண-இடபத்தின் மீதேறும். துரித சரம் - (வேகமாய்ச் சஞ்சரிக்கக் கூடிய) மான், யானே, சிங்கம். சர்மம் - தோல். அம்பரம்-ஆடை. சேமவடிவு ஆம்-இன்ப வடிவமாகிய. புயகம்-பாம்பு. நந்தன-மகனுகிய.

23. நிபிடம்-நெருங்கிய. கட்செவியன்-பாம்பு. கட்செவியனுக் கரசு - ஆதிசேடன்.

24. வலாரி - இந்திரன். அலல் - அல்லல் - துன்பம். ஆகுலம்-கலக்கம். கவியன்-பிரமன். மால்-மயக்கம். அரியும்-போக்கும். நாலு நிலே நூல்-நான்கு வேதங்கள். அலே இ(ல்)லான்-கடலே வீடாக உடைய திருமால். அலேவு இலான்-அலேதல் இல்லாதவன். மலே வி(ல்)லான்-சிவபிரான். கலோலம்-அலேகள். சலாகரம்-கடல். உலோக வலி-உலோகங்களேப்போல் வலிமை மிக்க. அனல் ஏறிட-தீப்பட. உலோகிதம்-போர்; இரத்தம்; சிவப்பு. சிலாவட தல உதய-வடக்கேயுள்ள கைலாய மலேயில் தோன்றி யிருப்பவர். சிலீமுகம்-வண்டு, அம்பு. விலோசனி - கண்களேயுடைய வள்ளி. வில் ஆர் சிலா மலர் - ஒளி பொருந்திய மலேயுச்சிச் சுனேயிலுள்ள (அல்லது) சோலேயிலுள்ள மலர்கள். மதி சேல் ஒழி - தன்னிடமுள்ள கறையான சேல் மீனே உதிர்த்து ஒழிக்கின்ற. சிலாதலி-(வள்ளி) மலேயில் வாழ்ந்தவள். கலாப முகில்-மயில் தோகை, மேகம் போன்ற திருமால். விலாச கலியாண கலே - (இச்சா சக்தி) விலாசம் வாய்ந்த மங்களகரமான மான்; வள்ளி. சோபம்-அழகு, ஒளி.

அகலன்-மார்பினன். விலாழியினில் ஆழி-தம் துதிக்கையில் ஒழுகும் மதநீர்க் கடலால். அனல்ஆற-சூடு தணிய. வேழம்-யானையாம் கணபதி.

## 4. சேவல் விருத்தம்

25. கொந்து-பூங் கொத்து. குதலை-மழலைச் சொல். அன கவுரி-அன்ன நடையுடைய உமை. தடம்-குளம். நந்தாவனம்-நந்தவனம் அல்லது அழியாத அழகு. திலகமயில்-சிறந்த மயில். வரிசை-பெருமை. மிண்டு ஆகிய-மதங்கொண் டவனுன. கோறி-கொன்று. எயிறு-தந்தம். பைந்தார்-பசுமையான பூமாலைகள். ராவணன் அன்போடு பணி சிவலிங்க மதைப் பார்மிசை வைத்த விநாயகன்: இது திருக்கோகர்ணத் தல வரலாறு.

26. உரகமணி-மணி உரகம்-ரத்தினம் ஏந்தும் பாம்பு. முறைபட-முறையே அழிய. மிடி-வறுமை. அலகை-பேய். குறள்-குள்ளப்பூதம். பணிகள்-பாம்புகள் அல்லது ஏவற் பசாசுகள். வடகிரி-மேரு. பயம்-தண்ணீர். இரவிச் சிரம்-மேருமலை யுச்சியில்.

27. எரியனைய நயன-நெருப்புப்போன்ற கண்களுடைய. விரம்-வீரம். கழுது-பேய். கரி-கருமை நிறம், யானையு மாம். பிரம ராட்சதம்-ப்ரம்ம ராக்ஷஸர்கள். அம் மிண்டுகள்-அந்த மதச் செயல்கள். முரடு-கரடு முரடு. பனை-பனைமரம். பனைஎன அதமுனையின்-பனைமரம் போலப் போர்முனையில். முனையின்-முயன்ருல் எனலுமாம். கடி-பேய். மறுகி-வருந்தி. உகிர்-நகம். பணி-அட்டதிக்கு நாகங்கள்.

28. கரி முரடுஅடி-அவிந்த கொள்ளிக் கட்டை; கரிக் கட்டைபோன்ற கால். முற்கரம்-ஓர் ஆயுதம்; சம்மட்டி; படைக்கலம். கொற்கையன்-கூன் பாண்டியன். வெப்பு அகையை-சுரநோயால் எரிதலை. உற்பனம் உரைத்து (சம்பந்தரைப் பாண்டி நாட்டுக்கு வரவழைத்ததனுல் ஏற்பட்ட 'கண்டு முட்டு', 'கேட்டு முட்டு' முதலிய) நிமித்தங்களையே மன்னனுக்கு வெப்பு நோய் உண்டாகக் காரணங்களாக எடுத்துக் காட்டி. அதமம் மிக்க-தம் சமயக் கொள்கைக்கு மாருகச் சம்பந்தர் மடத்துக்குத் தீ வைத்ததன் காரணத்தால் மன்னனுக்கு வெப்புநோய் உண்டாயிற்று என்ற உண்மையை மறைத்ததோ டன்றி, மன்னனின் செய்கைகளையே அவனுடைய

நோய்க்கும் காரணமாகக் காட்டியதால் இழிவு மிகுந்த. அவரும்-அச் சமணரிற் சிலரும். சிரபுரம்-சீகாழி. சிரபுரத் தவதரித் தவமுதத் தினமணி: சிவபுரத்து அவதரித்த அவ் அமுதத் தினமணி எனப் பிரிக்க. அமுதத் தினமணிச் சிவிகை - சந்திரன் போல் ஒளிவீசும் முத்துப்பல்லக்கு. அமுதத் தினமணி - சந்திரன். 'பனிப்பாநு' (கந்தரந்தாதி - 48) என்றதைப் போல. விற்பனன் - புலவன். இகல் - வலிமை மிக்க.

29. பகட்டி - வெருட்டி. குறப்பலிகள் - குறவர் இடும் பலிகள். கடி-பிணம். அறுகுழை-அறுந்த காதுகள். விறல் - வெற்றி. பொட்டு-நுழை வழி. கதித்து-பகுத்து. செச்சை - வெட்சி.

30. இடும்பு-தீங்கு. அங்கிரி - கால். மாஞகம் - மால்+நாகம்-பெரிய பாம்பு. மாஞகம் - ஆகம்மான்-(பாதி) உடலிலுள்ள பார்வதியாகிய மான் எனலுமாம். அக்கு - எலும்பு. கள்-தேனை உண்ணும். தேன் ஆன-வண்டுரு வெடுத்த. முருகர் உமாதேவியின் கூந்தலில் வண்டாயிருந்து திருவுத்தரகோச மங்கையில் மறைப்பொருள் கேட்ட வரலாறு இது.

31. பங்கம் - அச்சம், இடர். புயங்கம் - பாம்பு. சிவத்து (சிவந்து) அருந்தி-கோபித்து உண்டு. வன்பு-தீங்கு. மாதவி- மாதவன் சோதரி; பார்வதி. நான்முகி - பிராமி. மதலை - தூண். உகிர்-நகம்.

32. வீறு - பெருமை. காரி - வயிரவர். போர்க்களத்துப் பயிரவர். கதி-நடை. குறும்பு-சேஷ்டை. விடு பேய்கள்-தனித்த பேய்கள். கழு - கழுகு. பல் - பல. உச்சாடனம் - (பேயை) ஓட்டுதல். நுதி-நுனி. பிய்ச்சு-பிய்த்து. மகோதரம் - பெரு வயிறு. சிலேற்பனம்-சிலேத்துமம்-கோழை. வல்ல - வலிமை மிகுந்த. சீருத-கோபம் இல்லாத. சிலைகள்-மலைகள்.

33. தண்டதரன்-யமன். வன்சிறை - கொடிய, தண்ணீர்க் கரைகளில் வாழும். வதற - கதற. "கதறிவதறிய குதறிய"- திருப்புகழ்-511. வடவை - வடவா முகாக்கினி. செம்பவளமாக - சிவந்த பவளம்போல். அதிஹாசம் - பெருஞ் சிரிப்பு. ஆகமப்பலகை - சங்கப்பலகை. சங்க ஆகமத்தர்-சங்கப் புலவர்கள். ஆகமப்பலகை......முன்பேறு முத்தி முருகன் - உருத்திர சன்மர். பண்டு - முன்பு. மகுடம்-கிரீடம். வாகு-அழகு.

34. களபமுகன் - யானை முகவராம் கணபதி. வலம் வந்தான்-வலம் வந்தவரான கணபதி. குரு - ஒளி மிக்க. புனற்

கரை-அருவி நீர்க்கரை. பழனம்-வயல். இறும்-இற்று இல்லாமற்போகும். குடவயிறன்-விநாயகன்.

35. உரகபதி - பாம்பரசன். கார்-மேகம். மார் – மார்பு. அநகை-பாபமற்றவள். அசலை - மலைகுமாரி; சலிக்காதவள்.

36. வாசவன் – இந்திரன். புராரி - சிவபிரான். பூதரம் - மலை. காவு-சோலை. புளிமா-புளிக்கும் மாமரம். புளி - புளிய மரம் எனினுமாம். தாழை-தென்னை. கமுகு-பாக்கு. அடவி - காடு. காவுகனி...கமுகாடவிகள்: காடும் காவும் முருகனின் உறைவிடங்கள். "காடும் காவும் கவின்பெறு துருத்தியும்"- திருமுருகு-223. பரிபூரண இராஜன் - சீபரிபூரணம் என்னும் திருத்தணியில் வீற்றிருக்கும் (செங்கல்வ)ராயப் பெருமான். இராஜன் + அக்கனகமயில் எனப்பிரிக்க. விராசனை-வீர ஆசன எனினுமாம். காவு-சோலைகளிலும், வாழை, புளி, பாக்கு மரங்கள் நிறைந்த காடுகளிலும், நடனம் செய்கின்ற (மயில்), முருகவேள் ஆட்கொண்ட காரணத்தால் மெய்ஞ்ஞானத்தை அடைந்த வாகனம், பூரணமான வீரம் நிறைந்த, (முருகருக்கு) ஆசனமான பொன்மயில் என முழுவதையும் மயிலுக்கும் ஆக்கலாம். அடல்-வலிமை. இராசதம் - முக்குணங்களில் ஒன்று. ஊக்கம், கல்வி, கேள்வி, ஞானம், தருமம், தவம், தானம், வீரம் இவை இராசத குணங்கள். சிகாமணி- தலையிலுள்ள ரத்தினம் போல் உயர்ந்த முருகன். சரோருகம் – தாமரை. சீதளம் - குளிர்ச்சி. மனோகரன்-அழகன்; மகிழ்ச்சியுள்ளவன்.

## 5. திரு எழுகூற்றிருக்கை

37. ஓர் உரு-ஒப்பற்ற வரி வடிவத்துள்ள. தாரகப் பிரமம்-பிரணவம். ஒருவகைத் தோற்றத்து-ஐந்து முகத்தோடு அதோ முகமும் கொண்ட சிவனிடமிருந்து உண்டான (ஆணிடமிருந்து மட்டுமே உண்டான) தோற்றத்தில். இரு மரபு-தந்தையிடமிருந்து உண்டாகித் தாயினால் பரிசிக்கப்பட்டதனால், சத்திசிவ சம்பந்தங்கள் இரண்டும் உண்டெனப்படுவதும் அதோ முகம், சக்தியின் முகமே எனக் கூறப்படுவதும் நோக்கற்பாலன. இதன்படி இரு மரபும் எய்தப்பட்டது. சத்தி, சிவம் இரண்டின் இலக்கணமும் பொருந்த அமைந்ததென்ப. 'சத்திசிவம் ஒத்துவரு சத்தி வடிவேலர்'- வள்ளி கிழவர் வாக்குவாதம் (வ. சு. செ.) சிவனுக்கும் உமைக்கும் மகவாய்த்தோன்றியதால் சைவ மரபையும், திருமாலின் புத்திரியரை மணந்த

தால் வைணவ மரபையும் கொண்டனர் முருகவேள் என்பதும் பொருந்தும். ஒன்றாய் ஒன்றி - ஆறாயிருந்த தன்னை உமை சேர்த்துக் கட்டியபோது ஒருடலாய்ப் பொருந்தி. இருவரில் தோன்றி - சிவம், சத்தி அல்லது அக்கினி, தண்ணீர் இரண்டிடத்தும் தோன்றியிருந்து. மூவா தாயினை - (மூவாதது) மூப்படையாத பொருளாக ஆயினை. என்றும் இளமை கொண்டனை. இருபிறப்பாளர் : தாய்வயிற்றுதிப்பது ஒரு பிறப்பு. உபநயனம் எனப்படும் பூணூல் அணியும் சடங்கை ஏற்று இரண்டாவதான ஞானக் கண்ணைப் பெறுதல் இரண்டாம் பிறப்பு. இவ்விரண்டு பிறப்புக்களையும் உடையவர் அந்தணர். முருகன் அந்தணருள் ஒருவனானது:— 1. திருச்செந்தூரில் இரண்டாயிரம் திரிசுதந்தரருள் (முக்காணியருள்) ஒருவரானமை. 2. கௌண்டின்ய கோத்திரத்தில் சம்பந்தராய் அவதரித்தமை. 3. வள்ளியை மணக்கும் பொருட்டு வேதிய விருத்தனாய் ஆனமை. "மறவர் பொருப்பில் ஒருத்தி பொருட்டு அந்நாள் இளவடிவ முழுக்க நரைத்த விருத்த வேதியன்"—பூத வேதாள வகுப்பு. ஓராச் செய்கையின் - (பிரமனின்) ஆராயாத செயலினால். இருமை-பெருமை. இமைப்பினில் - கண்ணிமைப் பொழுதில். மூவர் - அரன், அரி, இந்திரன். இரு - பெரிய. முந்நீர் - கடல். நால்வகை ...... பொருப்பன்-ஐராவதத்தையுடைய இந்திரன். ஒருகைப் பொருப்பு—ஒரு கையையுடைய மலை — யானை. மகள் - தேவசேனை. ஒருவகை வடிவு-யானை வடிவம். இருவகைத்து ஆகிய தேவ உடல், பூதக்கால் என்னும் இருவகையான. இளங்களிறு, முதுகளிறு என இருவகையான எனினுமாம். மும்மதன் - விநாயகர். மும்மதன் தனக்கு மூத்தோன் ஆகி - மும்மதங்கொண்ட யானையாய் வந்த கணபதியைத் தனக்கு அண்ணன் எனக் கூறுபவனாகி. மூத்தவன் - முருகவேள். வள்ளியை வெருட்ட மும்மதங்கொண்ட யானையாக வந்த தோற்றத்துக்கு முன் முருகன் தோற்றமாதலால், முருகன் மூத்தவரானார் என்றும் கூறுவர். நால்வாய் - தொங்குகின்ற (துதிக்கை) வாய். அறுகுசூடி—கணபதி. முக்கட் சுடரினை - முக்கண் சுடரின் ஐ - மூன்று சுடர்போன்ற கண்களைக் கொண்ட சிவபிரானும் தலைவன். இருவினை மருந்து — சிவபிரான். முத்தமிழ் - இயல், இசை, நாடகத் தமிழ்கள். விரகன் - ஆசை கொண்டவன்; வல்லவன் நாற்கவி - ஆசு, மதுர, சித்ர, வித்தார கவிகள். ஐம்புலக் கிழவன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன்களையும் அடக்கி ஆளுதற் குரியவன். முருகன் எழுதரும் (புய) அழகன் : "எழுதரும் அழகு.........சாலத் ததும்பின" - புய வகுப்பு—20

கழுமலம் - சீகாழி. அறுமீன் - கார்த்திகை மாதர் அறுவர். பயந்தனை - பெறப் பெற்றனே. ஐந்தரு வேந்தன் - சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிஜாதம், கற்பகம் என்னும் ஐந்து விருட்சங்களை (மரங்களை) யுடைய இந்திர லோகத்துக்கு மன்னனானவன். "தேவச் சொர்க்கச் சக்கர வர்த்திப் பெருமாளே" (திருப். 1303) என்றதனால் இது விளங்கும். நால்-நான்கு வகையான. மறை-ரகசியமான. தோற்றத்து-பை, நிலம், முட்டை, வியர்வை என்னும் பிறப்புக்களுள் ஒன்றாகிய. முத்தலைச் செஞ்சூட்டு அன்றில்-மூன்று பிரிவுகளாக உள்ள அழகிய உச்சிக் கொண்டையையுடைய கிரவுஞ்சப் பறவை. குருகிரி-சுவாமிமலை (திருவேரகம்). ஆறெழுத்து-சடாட்சரம். ஏரகத்து அந்தணர் சிறப்பைத் திருமுருகாற்றுப் படையிற் காண்க.

(குறிப்புரை முற்றும்)

---

## மயில்—வேல்—முருகன் நாமப் பெருமை

(கலிநிலைத்துறை)

"மஞ்சுண்ட கோல மயிலுண்டயில் வேலு முண்டு
துஞ்சுண் டினிநான் மறலிக்குயிர் தோற்ப துண்டோ?
நஞ்சுண்ட நாதர் மகனார்திரு நாம முண்டு
நெஞ்சுண்டு பாட நினைவுண்டதில் நேய முண்டே."

—காதம்பரி-செந்தமிழ் V-492.

## வேலின் பெருமை

(நேரிசை வெண்பா)

"கற்றறிவ தென்றுங் கனவினுமுன் நாமமே
மற்றறியேன் வள்ளி மணவாளா—வெற்றிச்
செழுந்திருக்கை வேலைச் சிறுகாலை வாழ்த்தி
எழுந்திருக்கை வேலை எனக்கு."

—குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு
(1939-ம்ஆம் வருடப் பதிப்பு) பக்கம் XIV.

"தோகைமே லுலவுங் கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை."

—செவ்வந்திப் புராணம்.

# (தணிகாசல புராணப் பாடல்கள் 9, 10, 11)

## வேற்படை

பாலயிலும் குழவினனப் பாரிலுதி யாமற்
பாறையினும் கடியமனப் பாவையர்மா லுருமற்
சேலயிலுங் கொக்கெனவெந் தீமைபுரி யாமற்
சேனையிலும் யானையிலும் சிந்தனைவை யாமற்
சூலையிலும் நமன்றூதர் வாதையிலும் படாமற்
சூறையிலும் கொடியமனம் சுழன்றுதிரி யாமற்
காலயிலும் பாம்பயிலும் கார்மயிலை உகைத்தோன்
கைஅயிலை மாலையிலும் காலையிலும் பணிவாம்.

## மயில்

அருமையிலை ஒருபொருளுக் கடிமையிலை பிறருக்
கந்தகனுக் காண்மையிலை அடியேன்பால் வருதற்
கெருமையிலை சிறுமையிலை இன்மையிலை பகைஞர்க்
கெளிமையிலை மடமையிலை இழிதகைமை யிலைநோய்
பொருமையிலை வறுமையிலை பொய்ம்மையிலை பிறவிப்
புன்மையிலை தீமையிலை பொருமையிலை மகவான்
தருமயிலை வனமயிலை மணந்ததிருத் தணிகைச்
சண்முகனூர் உவந்தேறும் தனிமயிலைத் தொழவே.

## கோழிக் கொடி

மஞ்சேவல் கொளுமகவான் வந்தேவல் புரிய
மகிதலமுன் னேவல்கொளு மாசூர பன்மன்
நெஞ்சேவ லெனப்பிளந்து நிணங்கொறித்துச் சொரிசெந்
நீரருந்திக் கொக்கரித்து நிலவுலகம் அனைத்தும்
உஞ்சேவல் செய்யஇரு சிறைநீழல் பரப்பி
உவந்தேவல் விரைந்துகுகன் உயர்வலக்கை அமரும்
செஞ்சேவற் கொடிக்கடியேன் தினமேவல் புரியத்
தீவினையும் எனதேவற் றிறத்தினகன் றிடுமே.

# (தணிகை நாயகன் மாலைப் பாக்கள் 97 முதல் 100 வரை)

இயற்றியவர் :

தணிகைமணி - வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.)

✱

## வேலின் சிறப்பு

**வேலதே** சிவமஞ் செழுத்தெனச் சொற்றூர்
விரிபுகழ்ப் பாவல ரதனுல்
வேலதே நினைக்க, வேலதே ஓத,
வேலதே யான்தொழ என்றன்
பாலதே சிவனுர் அஞ்செழுத் தோதும்
பயனெலாம் எனஉணர்ந் தேன்யான்
தோலதே உடையாக் கொண்டவர்க் கோர்சொல்
சொல்லிய தணிகைநா யகனே ! (97)

## மயிலின் சிறப்பு

**காண்டகு** மயிலுக் கொருபெயர் நீல
கண்டமென் பாரத னுலே
ஆண்டவன் நீல கண்டத்தைத் துதிக்க
அதில்வரு பயனெலாம் மயிலை
வேண்டியான் துதிக்க எளிதினிற் கூடும் ;
வேல்மயில் இரண்டையும் நினைக்க
ஈண்டிடு பலன்கள் இவையெனக் கூற
இயலுமோ ? தணிகைநா யகனே ! (98)

---

**97.** பாவலர் - அருணகிரிநாதர் - "அவுணன் தெறித்து மங்க சிவ மஞ் செழுத்தை முந்த விடுவோனே "—திருப்புகழ் 606.
**98.** நீலகண்டம் - மயில் - திருப்பூவண நாதர் உலா. (131)

## சேவலின் சிறப்பு

சேவலுக் கியான்செய் தக்ககைம் மாறு
செகத்தினில் இல்லை;என் உயிரின்
காவலுக் கதைப்போல் துணைபிறி தில்லை ;
காலையில் நாடொறுங் கூவி,
மாவலைப் போக்கும் ஞானசூ ரியனும்
வள்ளலே உனைநினைப் பிக்கும் ;
ஆவலோ டதனை யானினைந் தேத்த
அருளுதி தணிகைநா யகனே ! (99)

## வேல், மயில், சேவல் தியானப் பலன்

ஐயனே உனது வாகன மாகும்
ஆடுமாப் பரிதனைப் போற்ற
மெய்யதா யெனதா ணவமது தொலையும் ;
வீறுசே வற்கொடி தன்னைத்
துய்யமா நிலையில் தியானிக்க ஞானம்
துலங்கும்;நின் வேற்செபம் கதியை
உய்யுமா றருளும் ; உண்மையீ துண்மை
உண்மையே தணிகைநா யகனே ! (100)

---

99. ஞான சூரியனைச் சேவல் கூவி அழைப்பது - தணிகைச் சந்நிதி முறை - சேவல் பத்து - 3ஆம் பாட்டு. "சேவற் பாட்டு" என்னும் நூலில் 5ஆம் பாட்டு பார்க்க. மா அல் - பேரிருள் (அஞ்ஞானம்).

# நிகண்டுகளில் மயில், வேல், சேவல்

## 1. மயில்

### 1. உரிச்சொல் நிகண்டு

*　　*　　*　　—சிகியே
*மயில்மஞ்ஞை தோகை மயூரம் கலாபி.* (3–16)

### 2. சூடாமணி நிகண்டு

*சிகியொடு ஞமலி தோகை சிகாவளம் சிகண்டி மஞ்ஞை*
*ஓகரமே மயூர மற்றும் உறுபிணி முகம் கலாபி*
*மகிழ்வுறு நவிரம் பீலி கேகயம் மயில்பன் முப்பேர்.*
—(3-பெயர்ப் பிரிவு-50.)

*சரணமே சிகண்டம் கூந்தல் சந்த்ரகம் கலாபம் கூழை*
*பெருகிய தோகை தொங்கல் பீலியாம் தூவி யும்பேர்*
*மருவிய அகவல் ஆலல் மயிற்குரல் ஏங்க லும்பேர்*
*வருமுருந் திறகின் முள்ளாம் மற்றன்னச் சிறகு தூவி.*
(ஷை—51)

### 3. சேந்தன் திவாகர நிகண்டு

மயிலின் பெயர்—8

*கேகயம் சிகண்டி சிகியே மயூரம்*
*தோகைகே தாரம் மஞ்ஞை பிணிமுகம்*
*ஆயின எல்லாம் மயிலென அறைவர்.*

மயிற்பீலியின் பெயர்—5

*தொங்கலும் கலாபமும் இறகும் கூழையும்*
*இங்கிவை மயிலின் பீலி என்ப*
*தங்கிய ஒருவழி கூந்தல் எனத்தகும்.*

**4**

இறகினடி முள்ளின் பெயர்—1

*மூருந்தே இறகின் முதன்முள் ளாகும்.*

மயிற் சிகையின் பெயர்—2

*அநந்தம் மயூரம் விரிசிகை யாகும்.*

## 4. நாமதீப நிகண்டு

மயிலின் பெயர்—11

*சிகிஞமலி மஞ்ஞை சிகண்டி நவிரம்*
*ஓகரம் பிணிமுகம யூரம்—சிகாவளமாம்*
*கோலமயிற் கேகயமும் கொள்கமயி லாட்டேங்கல்*
*ஆலல் அகவல் குரல். (239)*

*சிகி, ஞமலி, மஞ்ஞை, சிகண்டி, நவிரம், ஓகரம், பிணிமுகம், மயூரம், சிகாவளம், மயில், கேகயம்.*

மயிலாட்டின் பெயர்—4

*ஏங்கல் ஆலல் அகவல் குரல்.*

மயிற்றேருகைப் பெயர்—9

*சந்திராங் கந்தூவி கூந்தல்சிகண் டஞ்சருணம்*
*பைந்தொங்கல் பீலிகலா பந்தோகை—உந்துமுருந்*
*தச்சிறைமுள் [தித்திரிபொன் வாய்ப்புள் சிரல்கவுதம்*
*சிச்சிலிம ரங்கொத்தி சேர்.] (240)*

*சந்திராங்கம், தூவி, கூந்தல், சிகண்டம், சருணம், தொங்கல், பீலி, கலாபம், தோகை*

மயிற்சிறை முள்ளின் பெயர்—1:—*முருந்து.*

## 5. பிங்கல நிகண்டு

மயிலின் பெயர்

*சிகியே நவிரம் மஞ்ஞை பிணிமுகம்*
*சிகண்டி மயூரம் கேதாரம் ஓகரம்*
*சிகாவள ஞமலி கலாபி பீலி*
*தோகை கேகய மயிலெனச் சொல்லும். (2314)*

மயிற்றோகையின் பெயர்

*சரணம் சிகண்டம் கூந்தல்சந் திரகம்*
*தொங்கல் தோகை தூவியு மாகும். (2315)*

மற்று மயிற்றோகையின் பெயர்

*பீலியும் கலாபமும் கூழையும் அதற்கே. (2316)*

விரிதரு தோகையின் பெயர்

*மேசகம் என்பது விரிதரு தோகை. (2317)*

மயிற் குரலின் பெயர்

*அகவல் ஆலல் ஏங்கல் மயிற்குரல். (2318)*

மயிற் சிகையின் பெயர்

*அநந்தரம் மயூரம் விரிசிகை யாகும். (2319)*

இறகினடி முள்ளின் பெயர்

*முருந்தே இறகின் முதன்முள் ளாகும். (2320)*

### 6. போதிகை நிகண்டு

*கேகயஞ்சி காவளம யூரமஞ்ஞை பீலி*
*கேழ்ஞமலி சிகண்டிகலா பஞ்சருணி நவிரம்*
*தோகைபிணி முகமொகரஞ் சிகிமயிலீ ரேழாம்*
*தூவிசந்தி ராங்கமணி கூழைதொங்கல் சருணம்*
*மேகநிறப் பீலிகலா பந்தோகை சிகண்டம்*
*மேசகங்கூந் தலுமயிலின் இறகாகும் முருந்தென்*
*றுகுமதன் முள்ளின்பேர் குரலேங்கல் அகவல்*
*ஆலலெழால் இயல்மயிலாட் டெனநேமித்தனரே.*

## 2. வேல்

### 1. உரிச்சொல் நிகண்டு

*ஓங்கயில் சத்தி உடம்பிடி வேல்எஃகம். (7—4)*

### 2. சூடாமணி நிகண்டு

*அயில்சத்தி எஃக ஞாங்கர் உடம்பிடி ஐந்தும் வேலாம்.*
*(7 பெயர்ப் பிரிவு-7)*

### 3. சேந்தன் திவாகர நிகண்டு

**வேலின் பெயர்—8**

*சத்தி எஃகம் உடம்பிடி குந்தம்*
*விட்டே(று) அரணம் ஞாங்கர் அயில் வேல்.*

### 4. நாமதீப நிகண்டு

**வேலின்பெயர்—6**

*ஞாங்கர் சத்தி எஃகயிலு டம்பிடிவேல். (416)*

*ஞாங்கர், சத்தி, எஃகு, அயில், உடம்பிடி, வேல்.*

### 5. பிங்கல நிகண்டு

**வேலின் பெயர்—8**

*உடம்பிடி எஃகம் அயிலே சத்தி*
*விட்டே றரண ஞாங்கரும் வேலே. (1573)*

### 6. போதிகை நிகண்டு

**வேலின் பெயர்—9**

*விட்டேறு சத்திமதங் கயில்எஃகம் ஞாங்கர்*
*அரணம்உடம் பிடிகுந்தம் ஒன்பதும்வே லின்பேர். (235)*

## 3. சேவல்

### 1. உரிச்சொல் நிகண்டு

*குக்குடம் வாரணம் கோழிசர ணாயுதம். (3-21)*

### 2. சூடாமணி நிகண்டு

*குருகுகா லாயு தம்போர்க் குக்குடம் ஆண்ட லைப்புள்*
*பெருகுவா ரணமென் றைந்தும் பேசிய கோழி யாமே.*
*(பெயர்ப் பிரிவு-58)*

## 3. சேந்தன் திவாகர நிகண்டு

**கோழியின் பெயர்—4**

*குக்குடம் சேவல் வாரணம் கோழி.*

## 4. நாமதீப நிகண்டு

**கோழியின் பெயர்—8**

*[போதா பிதாக்குருகு புட்கரம் சாரசம்*
*நாதவண்டா னம்சிகரி நாரையாம்]—ஓதுகுரு*
*காண்டலைப்புள் ஞாிகுக்கு டங்காற் படைகோழி*
*மாண்டுவசம் வாரணமு மாம். (247)*

*குருகு, ஆண்டலைப்புள், ஞாிி, குக்குடம், காற்படை,*
*கோழி, துவசம், வாரணம்.*

## 5. பிங்கல நிகண்டு

**கோழியின் பெயர்—4**

*குக்குடம் குருகு வாரணம் கோழி. (2346)*

**மற்றும் கோழியின் பெயர்—2**

*ஆண்டலைப் புள்கா லாயுத மாகும். (2347)*

## 6. போதிகை நிகண்டு

*[இதற்பூழும் சிரவமுமே கவுதாரி யாகும்]*
*இகற்சேவல் வாரணம்குக் குடம்ஞாிி குருகு*
*பதப்படைஆண் டலைகொற்றி துவசம்சா மப்புள்*
*பகுசரணு யுதம்காலா யுதம்கோழிப் பேராம். (137)*

(நிகண்டுகளில் மயில், வேல், சேவல் முற்றும்.)

—✱—

# மயில், வேல், சேவல் இவற்றைக் குறிக்கும் சொற்கள்

## 1. மயில்

அகிவைரி
அநந்தரி
அநந்தி
அரி
அர்ச்சுனம்
ஒகரம்
க
கலபி
கலவி
கலாபி
கிரகவாகனம்
கிருகவாகு
குண்டலி
கூந்தல்
கூழை
கேகயம்
கேகாபலம்
கேகி
கேதாரம்
சந்திரகி
சந்திராங்கி
சரணி
சருணி
சிகண்டகம்
சிகண்டம்
சிகண்டி
சிகாதரம்
சிகாதாரம்
சிகாவலம்
சிகாவளம்
சிகி
சித்திர புச்சகம்
சித்திரமேகலை
ஞமலி
தழை
தீத்தாங்கம்
தீத்தாட்சம்
தீப்தாங்கம்
தீப்தாட்சம்
தூவி
தொங்கல்
தோகை
நடன ப்ரியம்
நர்த்தன ப்ரியம்
நிர்த்தன ப்ரியம்
நவிரம்
நீலகண்டம்
பிச்சி
பிஞ்சி
பிணிமுகம்
பிரபாதிகம்
பீலி
போத்து
மஞ்ஞை
மயில்
மயுகம்
மயூரம்
மருகம்
மாயூரம்
மார்ச்சாரகம்
மேகாநந்தி
மேகாரம்
மேசகி
வியாளபுக்
வையாளிப்பரி

## 2. வேல்

அயில்
அரணம்
உடம்பிடி
எஃகம்
எஃகு
குந்தம்
சத்தி
ஞாங்கர்
மதங்கு
வாகை
விட்டேறு
வேல்

## 3. சேவல்

அல்லசனம்
அல்லாகாரம்
ஆண்டலை
கலாவிகம்
காலாயுதம்
கிரகவாகு
கிரிடி
குக்குடம்
குருகு
கொற்றி
கோழி
சரணாயுதம்
சாமகோடம்
சிகண்டி
சிகண்டிகம்
சுபன்னன்
சூலிகம்
சேவல்
ஞாமி
தட்சன்
தாம்பிரசூடம்
தீமதலை
துவசம்
நகாயுதம்
பதாயுதம்
புச்சி
மதராகன்
யாமகோடம்
ரவியுமிழ் துவசம்
வசரம்
வாரணம்
வெயிலுமிழ் கொடி

## திரு எழுகூற்றிருக்கை—இரதபந்தப் படம்




[பாடலுக்குப் பக்கம் 30 பார்க்க]

உதவி—திரு. R. கலியாண சுந்தரமய்யர்.

# திரு எழுகூற்றிருக்கை

எழுகூற்றிருக்கை என்பது ஒன்றுமுதல் ஏழுவரை ஏறியும் இறங்கியும் எண்ணலங்காரம் படப் பாடப்படும் பாட்டுவகை எனப் பொருள் தருவதுடன், திரு - எழு - கூற்று - இருக்கை எனப் பிரிவதாகித், திரு - முத்தித்திரு - முத்தி இன்பம், எழு - எழுகின்ற—முத்தியின்பத்தை எழுப்புகின்ற, கூற்று - சொற்களின், இருக்கை - இருப்பிடம் எனவும் பொருள் தருவதாகி—லக்ஷ்மீகரமும் வீட்டின்பமும் தருதற்கு இருப்பிடமான திருப்பாடல் இது என்பதும் இப்பாடலின் பெயரளவிலேயே விளங்காநிற்கும்.

திரு எழுகூற்றிருக்கை என்னும் சித்ரகவி 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இது: "ஒன்று முதல் ஏழுவரையும் எண்கள் முறையே ஒவ்வொன்றாக ஏறியும் இறங்கியும் வருமாறு கூறப்படும் மிறைக்கவி வகை."

"ஒன்று முதலா ஓரேழ் ஈறுச்
சென்றஎண் ஈரேழ் நிலந்தொறுந் திரிதர
எண்ணுவ தொன்றும் எழுகூற் றிருக்கை"—அவைதாம்
"இரதபெந் தத்தினில் இடையறை இரண்டாய்ச்
சரதம துறநடை சார்தரு பான்மையின்
ஒன்றுபன் னொன்றாய் ஒருபன் னிரண்டாய்
நின்றய லேனவும் நிலந்தொறு முபயங்
குன்றுவ தாய்த்தொகை கூடியொன் றிலிறும்"

மாறனலங்காரம்—சூத்திரம் 297-298.

[இதன் பொருள்:—"செய்யுளகத்து எண்ணப்பட்ட ஒன்றென்னும் எண் ஒன்று முதலாக ஓரேழ் ஈறாக நிகழ்ந்த எண்களைப் பதினாலு நிலந்தோறும் மீள எண்ணுவதாகும் எழுகூற்றிருக்கை; அங்ஙனம் எண்ணப்படும் எண்கள்தாம் இரதத்திற் பெந்திக்குமிடத்து மையத்தில் பத்தியிரண்டு பத்தியாய்க் கீறி வலமே இடமே நடத்தலைத்தரும் பகுதியில் மையத்தில் ஒன்று பன்னொன்றாகவும், அதன் அயல் இரு பத்தியில் இரண்டும் பன்னிரண்டாகவும் ஒழிந்த மூன்று முதலிய எண்ணும் பத்திதோறும் இரண்டு குறைந்து ஏழு என்னும்தொகை பொருந்தி முதலே நின்ற ஒன்றில் வந்து முடியும்." "ஏழறையாக்கக் குறுமக்கள் முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியால் வழுவாமையால் ஒன்று முதலாக ஏழு இறுதியாக முறையானே பாடுவது."]

நக்கீரர், சம்பந்தர், திருமங்கையாழ்வார், இம்மூவர் பாடிய திரு எழுகூற்றிருக்கைகள் பின்வருமாறு அமையும்.

ஓம்

அருணகிரிநாதர் திரு எழுகூற்றிருக்கை ஒரு சிறிது வேறுபட்டுப் பின்வருமாறு அமையும். (ரதபந்தப் படம் முன்புறம்)






# பிழை — திருத்தம் முதலியன

| பக்கம் | வரி எண் | பிழை & நீக்கவேண்டுவன | திருத்தம் & சேர்க்க வேண்டுவன |
|---|---|---|---|
| 1 | (கீழ்க் குறிப்பு) 8 | வெண்பா காணப்பட்டது. | வெண்பாக்கள் காணப்பட்டன. |
| | | அஃது | அவை |
| 1 | ,, 9 | படுகின்றது. | படுகின்றன. |
| 1 | ,, வரி 14-க்கு மேல் சேர்க்க வேண்டியது | — | "பச்சை மயிலே பசியாமல் எப் பொழுதும் இச்சையுடன் பாம்பை இரைகொளுநீ— *பச்சைமயில் பாகனார் செந்திப் பதியினார் பன்னிருதோள் வாகனார் இங்குவர வை" (* பச்சை மயில்—பசிய மயில் போல்வாளாம் வள்ளி நாயகி) |
| 2 | 19 | சத்யப்ரியா | சக்திப்ரியா |
| 3 | 1 | ரட்சாபரண | ரட்சாபரணன் |
| 4 | 7 | நந்தினியெனும் | நந்தினிவள்ளி |
| 4 | 8 | வள்ளிமணி நூபுரமலர்ப் | மணிநூபு ராரணமலர்ப் |
| 7 | 24 | கிரியெனவும் | சிகரியென |
| 12 | 22 | மறுள்து | றுள்ளது |
| 14 | 19 | மாணப் | மானப் |
| 18 | 26 | ஆரவிடு | ஆறவிடு |
| 25 | 3 | கழுவன் | கழுபல் |



# விற்பனைக்குரிய புத்தகங்கள்

| | | விலை ரூ. | காசு |
|---|---|---|---|
| 1. | சேய்த்தொண்டர் புராணம்—செய்யுள் நடை (முருகனடியார்கள் வரலாறு) .... | 8 | 00 |
| 2. | வைஷ்ணவி சந்நிதி முறை—தொகுதி II .... | 3 | 00 |
| 3. | நாகை அருட்புகழ் .... | 0 | 75 |
| 4. | அருணகிரிநாத சுவாமிகள் தோத்திர மஞ்சரி | 0 | 75 |
| 5. | திருமுருகன் ஹரஹரோ ஹராக்கும்மி .... | 0 | 25 |
| 6. | வள்ளிமலை அருட்புகழ் .... | 0 | 30 |
| 7. | திருப்பழனத் தலபுராண வசனம் (அருட்புகழுடன்) .... | 1 | 00 |
| 8. | தேவியும் அருணகிரியாரும் (ஆராய்ச்சி நூல்) (அச்சில்) | | |
| 9. | தேவி போற்றி அகவல் (அச்சில்) | | |
| 10. | இருடியர் பட்டி அருட்புகழ் .... | 0 | 15 |

கிடைக்குமிடம்:

**அருளிசை. S. V. சுப்ரமண்யம்,**

**141, லிங்க செட்டித் தெரு,**

**சென்னை-1.**

## 1. வேலைப் பற்றிய இதர நூல்கள்

1. வேல் வகுப்பு } —அருணகிரிநாதர்
2. வேல் வாங்கு வகுப்பு }
3. வேற் பத்து —தணிகைக் கந்தப்ப தேசிகர்
4. வேலலங்காரம் —தண்டபாணி சுவாமிகள்
5. வேற் பாட்டு —வ. சு. செங்கல்வராய பிள்ளை
6. சத்ரு சங்கார வேற்பதிகம்

## 2. மயிலைப் பற்றிய இதர நூல்கள்

1. மயில் வகுப்பு —அருணகிரிநாதர்
2. மயிற் பத்து —தணிகைக் கந்தப்ப தேசிகர்
3. மயிலலங்காரம் —தண்டபாணி சுவாமிகள்
4. மயில் பாட்டு —வ. சு. செங்கல்வராய பிள்ளை

## 3. சேவலைப் பற்றிய இதர நூல்கள்

1. சேவற் பத்து —தணிகைக் கந்தப்ப தேசிகர்
2. சேவற் பாட்டு —வ. சு. செங்கல்வராய பிள்ளை

T. 3243.



ஆடும்பரி



வேல்



அணிசேவல்

## கந்தரநுபூதி

ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்!
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடும் தனியானை சகோதரனே!

---

## கந்தரலங்காரம்

(மயில், வேல், சேவலைப் பற்றியன; எண்—அலங்கார எண்)

ஓலையும் தூதரும் கண்டுதிண் டாடல் ஒழித்தெனக்குக்
காலையும் மாலையும் முன்னிற்கு மேகந்த வேள்மருங்கிற்
சேலையும் கட்டிய சீராவும் கையிற் சிவந்தசெச்சை
மாலையும் சேவற் பதாகையும் தோகையும் வாகையுமே. (27)

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணைஅவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே. (70)

பாரி அச்சகம், சென்னை-1.